விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 13 வெள்ளிக்கிழமை (29.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 254



நல்லூர் கந்தசுவாமி ஆலய சப்பறத் திருவிழாவான நேற்று முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் திருவீதியுலா வந்த காட்சி.

## நல்லூரானுக்கு இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறும். காலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று 7 மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

இதேவேளை நேற்று இடம்பெற்ற சப்பறத் திருவிழாவின்போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற சப்பறத் திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களின் எண்ணிக்கையை விட இம்முறை அதிகளவானோர் கலந்து கொண்டதாக கூறப்பட்டது. நேற்றைய சப்பறத் திருவிழாவின்போது விசேடமாக கரகாட்டம், காவடியாட்டம் என்பனவும் இடம்பெற்றன.

இதேவேளை நல்லூர் பிரதேச பிரிவுக்குட்பட்ட பகுதியில் மட்டும் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டிருந்ததால் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நேரகாலத்துடனேயே வீடுகளுக்கு திரும்பியதைக் காணக் கூடியதாக இருந்தது. (ச)



# வன்னியில் இடம்பெயரும் மக்களை வவுனியாவுக்கு அழைப்பதே திட்டம்

## நெடுங்கேணியில் கிளைமோர்த் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணிப் பகுதியில் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நெடுங்கேணிப் (16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயரும் மக்களை வவுனியாவுக்கு அழைத்து வந்து, வன்னியை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்ட பின்னர் அவர்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதே அரசாங்கத்தின் திட்டமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## புலிகளின் விமானத் தாக்குதலில் இரு கடற்படைப் படகுகள் அழிப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் உள்ள கடற்படைத் தலைமையக தளத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் கடற்படைப்படகுகள் இரண்டு அழிக்கப்பட்டுள்ளன என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஊடகத்தில் படைத்துறை ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை படைத்துறை இழப்பு விபரங்களை மூடிமறைத்து வருகின்றது.

கடற்படையின் (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட வேண்டும்

### கொழும்பு ஆயர் வேண்டுகோள்

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் பொதுமக்களின் பாதுகாப்புக்காக சமாதான வாயில்களையும் சமாதான வலயங்களையும் ஏற்படுத்துவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்க வேண்டுமென கொழும்பு ஆயர் டுலிப் டீ சிக்கேரா வேண்டுகோள் விடுவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# திருமலைத் துறைமுகத்திற்கு பாரிய சேதம்

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

திருகோணமலையில் கடற்படையின் கிழக்கு தலைமையகத் தளத்தின் மீது வான்புலிகள் நடத்திய தாக்குதல்களில் பாரிய அழிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதில் 4க்கும் அதிகமான கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 35க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.


இது தொடர்பில் விடுதலைப் புலிகள் வெளியிட்ட செய்தி வருமாறு,

திருகோணமலை உட்துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள இலங்கை கடற்படையின் கிழக்குத் தலைமையகம் மீது கடந்த 26ஆம் திகதி இரவு 9.15 மணிக்கு வான் புலிகளின் வானூர்திகள் தாக்குதலை நடத்தின. (16ஆம் பக்கம் பார்க்க)



திருகோணமலைத் துறைமுகத்தின் மீது தாக்குதல் நடத்திய வான்படை வீரர்களுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உரையாடுவதையும் அவர்கள் குழுவாக எடுத்துக்கொண்ட படத்தையும் காணலாம். (படங்கள்: புதினம்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சப்பறத் திருவிழாவில் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் ஆலயத்தினுள் இருந்து வெளியே வருவதையும் சப்பறத்தில் காட்சியளிப்பதையும் கலந்து கொண்ட பக்தர்களின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.

# முல்லைத்தீவு கடற்றொழிலாளர் மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினரின் டோறாப் பீரங்கிப் படகுகள் நடத்திய தாக்குதலில் கடற்றொழில் படகு ஒன்று அழிந்துள்ளது.

கடற்படையினரின் 16 டோறாப் பீரங்கிப் படகுகள் நேற்றுக் காலை 6 மணிக்கு முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை இலக்கு வைத்துப் பீரங்கித் தாக்குதலை நடத்தின.

இதில் படகு ஒன்று தாக்குதலுக்கு இலக்காகி முற்றாகச் சேதமாகியது. கரையோரத்திலிருந்த ஆ.ஆரோக்கியநாதன் என்பவரின் வீடு சேதத்துக்குள்ளாகியது.

டோறாக்கள் தாக்குதல் நடத்தியதனையடுத்துப் படகுகள் உடனடியாகத் தொழிலை விட்டுக் கரை திரும்பின எனக் கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்குள்ளாகிச் சேதமாகிய படகில் மோகனதாஸ் குமார் (வயது-23) மற்றும் அ. நேசன் (வயது-20) ஆகிய இருவரும் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர்.

டோறாப் படகுகள் வந்தபோது தாம் படகினைக் கரையை நோக்கிச் செலுத்தியதாகவும் அப்போது தமது படகிற்கு அண்மையாக பீரங்கிக் குண்டுகள் வந்து விழ தாம் கடலில் குதித்து நீந்தத் தொடங்கியதாகவும் அவ்வேளை படகு தாக்குதலுக்குள்ளாகி இரண்டாகப் பிரிந்தது என தப்பி வந்த கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# நஞ்சான உணவை உண்டதினால் 212 படையினர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் தெகியத்த கண்டியவில் உள்ள இலங்கை பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வந்த படையினர் 212 பேர் உணவில் நஞ்சு ஏற்பட்டதனால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை அருந்திய உணவிலேயே நஞ்சிருந்ததாகத் தெரியவருகின்றது. 212 படையினரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக மருந்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றுகின்ற உணவு அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடம் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெகியத்த கண்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில படை வீரர்களின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் 10 பேர் பொலனறுவை மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு விசேட சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக தெகியத்த கண்டிய வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டபிள்யூ.சி.கே.வீரபான தெரிவித்துள்ளார். (ச-5)

# வவுனியாவில் இரு முனை முன்னகர்வு முறியடிப்பு

## 7 படையினர் பலி

(கிளிநொச்சி)

வவுனியா பாலமோட்டை மற்றும் குஞ்சுக்குளம் பகுதிகளூடாகப் படையினர் இரு முனைகளில் மேற்கொண்ட முன்னகர்வு முறியடிக்கப்பட்டது.

இதில் 7 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 17 பேர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். பாலமோட்டை மற்றும் குஞ்சுக்குளம் பகுதிகளூடாக நேற்றுப் பிற்பகல் 2 மணி தொடக்கம் படையினர் தமது பின் தளங்களிலிருந்து செறிவான எறிகணை மற்றும் வெடிகணைச் சூட்டாதரவுடன் முன்னகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தீவிர எதிர்த் தாக்குதல் பிற்பகல் 4 மணி வரை நீடித்தது. இதில் 7 படையினர் கொல்லப்பட்டனர். 17 படையினர் படுகாயமடைந்தனர் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச)

# பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு வடக்கில் ஜனநாயகம் ஏற்படுத்தப்படும்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதம் நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டு வடக்கில் மீண்டும் ஜனநாயகம் ஏற்படுத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்தார்.

வட மத்திய மற்றும் சப்ரகமுவ தேர்தலில் தாய் நாட்டை நேசிக்கும் மக்கள் ஜனாதிபதியின் கொள்கைக்கும் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கும் ஆதரவாக வாக்களித்து அரசாங்கத்தைப் பாரிய வெற்றியடையச் செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோர் நேற்றுக் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் ஐ.நா. உயர் அதிகாரிகளையும் வெளிவிவகார அமைச்சில் சந்தித்தனர்.

இதன்போது அண்மையில் நடந்து முடிந்த வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல், வன்னியில் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கை, இதனால் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின் பின்னர் நேற்று முற்பகல் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் றோகித போகொல்லாகம மேலும் கூறியதாவது,

அண்மையில் நடந்து முடிந்த 2 மாகாண சபைகளுக்குமான தேர்தல் நீதியானதும் சுதந்திரமானதுமாக நடைபெற்றதாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலும் தேர்தல்கள் ஆணையகமும் தெரிவித்துள்ளன.

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொள்கைகளுக்கும் அரசாங்கத்தின் நிர்வாகத்திற்கும் தமது ஏகோபித்த ஆதரவை வழங்கியுள்ளனர்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு அரசாங்கத்திற்குத் தமது உறுதியான ஆணையையும் வழங்கியுள்ளனர். மக்களின் ஆணையை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கையையும் மேற்கொள்ளும்.

கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்தபோதும் பல்வேறு கவலைகளும் அச்சங்களும் வெளியிடப்பட்டன. ஆனால் அங்கு நீதியான தேர்தல் நடத்தப்பட்டுத் தற்போது மக்கள் பிரதிநிதிகள் மாகாணத்தை நிர்வாகம் செய்யும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

கிழக்கைப் போன்று வடக்கு மாகாணத்திலும் மீண்டும் ஜனநாயகம் ஏற்படுத்தப்படும். நாட்டின் சகல பகுதியிலிருந்தும் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு ஜனநாயகம் கட்டி எழுப்பப்படும் என்றார். (ச-5)

# ஊடகவியலாளர்களின் மீது பல்கலை மாணவர்கள் தாக்குதல்

செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடமாணவர்கள் சிலர் நேற்று மாலை தாக்குதல் நடத்தியுள்ளனர். லங்காதீப செய்திப் பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் இருவரும் நியூஸ் பெஸ்ற் ஊடகவியலாளர் ஒருவருமே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

லங்காதீப பெண் ஊடகவியலாளர் யமுனா கஸ்ஸ கல்லியராச்சியும் புகைப்படப் பிடிப்பாளர் ஜனக கல்பதியும் தமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் சஞ்சிகைக்கு தகவல் திரட்டுவதற்காக கொழும்பு கேரி வித்தியாலத்திற்கு அருகில் நேற்று மாலை சென்றுள்ளனர். அதன் பின்னர் மருத்துவ பீட மாணவர் ஒருவரிடம் தமது சஞ்சிகைக்கான தகவல்களைப் பெற்றுக் கொண்டபோது அவ்விடத்திற்குச் சென்ற மருத்துவ பீட மாணவர்கள் சிலர் தனக்கும் புகைப்படப்பிடிப்பாளருக்கும் அச்சுறுத்தல் விடுத்து தாக்குதல் நடத்தியதாகவும் பெண் ஊடகவியலாளர் யமுனா பொலிஸில் முறையிட்டுள்ளார். (ச-3)

# அங்குரார்ப்பண வைபவம்

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் முதியோர் உதவித்திட்ட அங்குரார்ப்பண வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தில் தியாகி அறக்கொடை நிறுவனச் செயலாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் கலந்துகொள்கிறார். கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ்.பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் க.மகேஸ்வரன், யாழ்.சர்வோதய மாவட்ட இணைப்பாளர் அ.கி.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (ஓ)

# திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இருவர் மடக்கிப் பிடிப்பு

## கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பட்டப் பகலில் வீடொன்றினுள் திருட முற்பட்ட திருடர்கள் இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் இருவரும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

பழைய இரும்புப் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்கள் போல் சைக்கிளில் சென்ற சுமார் 19 வயது மதிக்கத்தக்க 6 பேர் கொக்குவில் செம்பியன் வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் திருட முற்பட்டுள்ளனர்.

அப்போது வீட்டினுள் இருந்த வீட்டு உரிமையாளர் அவர்களைக் கலைத்துச் சென்று கொக்குவில் புகையிரத வீதியில் வைத்து அனைவரையும் மடக்கிப் பிடித்தார். எனினும் நான்கு பேர் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து அப் பகுதியில் திரண்ட பொதுமக்கள் அவ் இருவரையும் மின் கம்பத்துடன் கட்டி நையப்புடைத்தனர். இது தொடர்பாக இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டுச் சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினரிடம் அவர்கள் இருவரும் ஒப்படைக்கப்பட்டனர். (ச)

# இன்று ஒரு தகவல்

## தேடல்

கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஒருவருக்கு ஆசை! அதற்குப் பலவழிகளில் முயன்று பார்த்தார். ஒன்றும் சரிவரவில்லை.

அந்த சமயத்தில் ஒரு ஆன்மீகப் பெரியவர் (ஆதிசங்கரர்) அந்த ஊருக்கு வந்தார். இவர் உடனே அவரிடம் ஓடிப்போய், ''நான் இறைவனைப் பார்க்கவேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டும்? ஒரு வழி சொல்லுங்கள்!'' என்று கேட்டார்.

அதற்கு அவர் , ''நீ... தனிமையான இடத்தில் இறைவனை நினைத்து தியானம் செய். கடவுள் காட்சி கொடுப்பார்!'' என்றார். உடனே இவர் காட்டுக்குப் போய் தியானம் செய்ய ஆரம்பித்தார். அவர் தியானம் செய்து கொண்டிருக்கையில், ''யார் நீ... இங்கே என்ன செய்கிறாய்?'' என்று ஒரு குரல் கேட்டது.

இவர் கண்ணைத்திறந்து பார்த்தார். பக்கத்தில் ஒரு வேடன் நின்றுகொண்டிருந்தான். ''நான் இறைவனைத் தேடி தியானம் செய்துகொண்டிருக்கிறேன்'' என்றார்.

''இறைவனா? அது எப்படி இருக்கும்? சிங்கம், புலி மாதிரி இருக்குமா? இந்தக் காட்டில் எனக்குத் தெரியாதது எதுவுமே இல்லை! விவரத்தை சொல். அது எங்கே இருந்தாலும் பிடித்து கொண்டுவந்து விடுகிறேன்!'' என்றான் இவருக்கோ சங்கடமாகப் போய்விட்டது.

''இவன் என்ன விவரம் தெரியாத ஆளாக இருக்கிறானே... இவன் தொந்தரவிலிருந்து எப்படி மீள்வது'' என்று யோசித்தார்.

''இதோ பார்... இறைவன் எப்படி இருக்கும் என்று கேட்டாய் அல்லவா... அதன் தலை சிங்கம் மாதிரியும் உடம்பு மனிதன் மாதிரியும் இருக்கும். அதாவது மனித உடம்பில் சிங்கத்தின் தலை! எங்கேயிருந்தாலும் பார்த்துக் கொண்டு வா பார்ப்போம்!'' என்றார்.

சரி... கொண்டு வருகிறேன் என்று சொல்லி காலையில்புறப்பட்டவன் காடு முழுவதும் தேடி அலைந்தான். மாலையாகிவிட்டது. மிகவும் களைத்துவிட்டான்.

''நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே ஒரு மிருகத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை... இதற்குப் பின்னரும் நான் உயிருடன் இருக்க வேண்டுமா?'' என்று அங்கிருந்த ஒரு கொடியை பறித்து தூக்குக் கயிறு மாதிரி கட்டி தற்கொலை செய்து கொள்ளப்போனான்.

அந்த நேரத்தில் பக்கத்திலிருந்த புதரில் ஒரு சல சலப்பு கேட்டது என்னவென்று திரும்பிப்பார்த்தால், மனித உடம்புடனும் சிங்கத் தலையுடனும் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. உடனே இறங்கி ஓடி வந்து அதை அந்தக் கொடியால் சுற்றிக்கட்டி இழுத்துக் கொண்டு வந்தான். தியானம் செய்து கொண்டிருந்தவருக்கு ஒன்றும் புரியவில்லை.. அந்தரத்தில் அந்தக் கொடி ஏதோ ஒரு உருவத்தைச் சுற்றியிருப்பது தெரிந்தது! வந்திருப்பது இறைவன் தான் என்று புரிந்துகொண்டார். அந்தத் திசையை நோக்கி வணங்கினார்.

''இறைவா! இங்கே நான் உன்னை நினைத்து தியானம் செய்துகொண்டிருக்கிறேன். என்னை விட்டு விட்டு இந்த உயிரைக் கொல்லும் வேடனுக்கு காட்சி கொடுத்திருக்கிறாயே... இது நியாயமா? '' என்று கேட்டார்.

அப்பொழுது அசரீதியாக அந்தக்குரல் கேட்டது. இறைவன் சொன்னார். ''நீ என்னையே நினைத்தாலும் உன்னுடைய முழு மனதும் என்மீது வரவில்லை! ஆனால் இந்த வேடன் காலையிலிருந்து மாலைவரை முழுமனதுடன் என்னையே நினைத்து தேடினான் இது தான் உண்மையான தேடல்! அதனால் தான் அவனுக்கு காட்சி கொடுத்தேன்!'' என்றார்.

இந்தக்கதையிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டிய உண்மை என்னவெனில் எந்த ஒரு உண்மை யைத் தேடினாலும் அந்தத் தேடல் உண்மையான தேடலாக இருக்க வேண்டும் என்பது தான்!

ஒரு திருவிழாக்கூட்டத்தில் ஒரு பெண்மணியின் கழுத்திலிருந்த சங்கிலி திருட்டுப்போய்விட்டது. அந்தக் கும்பலில் திருடனை எல்லோரும் தீவிரமாக தேடிக் கொண்டிருந்தனர். மும்முரமாகத் தேடிக்கொண்டிருந்த ஒருவர் ''எவ்வளவுதான் உண்மையாகத் தேடினால் கூட அந்தத்திருடன் கிடைக்க மாட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றார்.

''எப்படி சொல்றீங்க?'' என்றார் பக்கத்திலிருந்தவர். அவர் காதோடு காதாக, ''இப்ப நாம் எல்லோரும் தேடிக் கொண்டிருக்கிறது என்னைத்தான்!'' என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# முன்கூட்டியே நளினியை விடுதலை செய்யக்கூடாது

## நீதிமன்றில் சுப்பிரமணிய சுவாமி கோரிக்கை

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினியை முன்கூட்டியே விடுதலை செய்வது கூடாது. அவருடைய வழக்கறிஞர் பல உண்மைகளை மறைத்துவிட்டார் என்று ஜனாதாக்கட்சித்தலைவர் சுப்பிரமணிய சுவாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தன்னை விரைவில் விடுதலை செய்யக்கோரி நளினி உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கில் தன்னையும் இணைக்க வேண்டும் என்று கோரி சுப்பிரமணிய சுவாமி சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அதை ஏற்க உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது. இந்த நிலையில் நளினியின் மனு நீதிபதி நாகமுத்து முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது திடீரென அங்கு சுப்பிரமணிய சுவாமி ஆஜரானார். பின்னர் அவர் நீதிபதியிடம் கூறுகையில் இந்த வழக்கில் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பான முழுமையான விவரங்களை நளினியின் வக்கீல் சமர்ப்பிக்கவில்லை. நளினிக்கு மரண தண்டனை விதிக்கும் போது உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துக் களையும் அவர் உயர்நீதி மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரவில்லை.

நளினியின் வக்கீல் பல உண்மைகளை மறைத்துவிட்டார் என்றார். அதைக்கேட்ட நீதிபதி எனக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் நான் உரிய உத்தரவுகளை பிறப்பிப்பேன் ஒருவேளை மனுதாரரின் (நளினி) வக்கீல் உண்மைகளை மறைத்திருந்தால் அது அவர் களுக்குத்தான் பாதாகதமாக அமையும் உங்களுடைய வாதங்களை இன்று இந்த வழக்கில் விசாரணை தொடங்கும் போது எழுத்துபூர்வமாக கொடுங்கள் என்றார். அதை ஏற்றுக் கொண்ட சுவாமி இன்று தனது வாதத்தை எழுத்து பூர்வமாக சமர்ப்பிப்பதாக தெரிவித்தார். (அ-6)

# இலங்கையர்கள் உள்ளிட்ட 300 மாணவர்கள்

## ஆஸி. குடிவரவு சட்டங்களை மீறியதாக குற்றச்சாட்டு

இலங்கையர்கள் உள்ளிட்ட 300 மாணவர்கள் அவுஸ்திரேலிய குடிவரவு குடியகழ்வு சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிட்னி மற்றும் மெல்போர்ன் ஆகிய நகரங்களில் உள்ள தடுப்பு முகாம்களில் குறித்த மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை, இந்தியா, சீனா, மலேசியா மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட 24 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு அவுஸ்திரேலிய குடிவரவு குடியகழ்வு சட்டங்களை மீறியுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

விஸாக்கள் 'காலவதியாதல், பயிற்சி நெறிகளில் சித்தியெய்தாமை பயிற்சி நெறிகளை ஆரம்பிக்காமை. சட்ட விரோதமான முறையில் தொழிலில் ஈடுபடல் உள்ளிட்ட குற்றச் செயல்களில் குறித்த மாணவர்கள் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்டுள்ள 20 மணித்தியாலயங்களுக்கு அதிகமாக தொழிலில் ஈடுபட்ட பல மாணவர்களுக்கே இவ்வாறு விஸா ரத்து செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பல மாணவர்கள் சுமார் மூன்று ஆண்டு காலம் அவுஸ்திரேலிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-6)

# இராசி பலன்

29.08.2008
(ஆவணி 13, வெள்ளிக்கிழமை
ஆயிலியம் பின்னிரவு 2.26மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 03.20மணிவரை
இராகுகாலம்-10.35-12.05மணிவரை
சுபநேரம்-06.05-07.35 மணிவரை
நல்லூர் கந்தசுவாமி தேர்

| | |
|---|---|
| மேடம் | பயந்த சுபாவம், தாய்வழி உறவு, ரோகநிலை, அதிக பிரயாசை. |
| இடபம் | இஷ்டசித்தி, சுபநிகழ்வு, அன்னியர் சந்திப்பு. மனோதைரியம். |
| மிதுனம் | மனோசங்கடம், தொழிலில் ஆர்வம், கௌரவக்குறைவு, பொருள்விரயம். |
| கடகம் | தெய்வசிந்தை, வெகுமானம், நல்ல முயற்சி, போசனசுகம். |
| சிங்கம் | சோம்பல் நிலை, முயற்சி தாமதம், கோபப்படுதல், பிரயாணம். |
| கன்னி | தெய்வதரிசனம், சகோதரர் உதவி, கீர்த்தி, காரியநன்மை. |
| துலாம் | நண்பர்கள் உதவி, தொழில் முன்னேற்றம், பெருமையடைதல், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, உஷ்ண வியாதி, பிரயாணம். |
| தனுசு | கௌரவக்குறைவு, வேலைச் சுமை, அஜீரணக்கோளாறு, முயற்சி தாமதம். |
| மகரம் | தெய்வதரிசனம், கலந்துரையாடல், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| கும்பம் | சுகவாழ்வு, எடுத்தகருமங்கள் கைகூடும், தெய்வசிந்தை, புதிய திருப்பம். |
| மீனம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், வியாபாரநன்மை, சொத்துப்பிணக்கு |

வளவன்

# ஆசியாவில் 1.4 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்

## உலக வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

ஆசியாவில் சுமார் 1.4 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாக உலகவங்கி தெரிவித்துள்ளது. இவர்களின் நாளொன்றுக்கான வருமானம் 1.25 டொலர்களுக்கும் குறைவாக இருப்பதாக உலகவங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1.35 டொலர்களுக்கு குறைவான பெறுமதியை நாள் வருமானமாக கொண்டுள்ள எந்தவொரு நாடும் பிராந்தியத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட நாடு என கணக்கப்படுமென ஆசிய அபிவிருத்திவங்கி தெரிவித்துள்ளது.

2005ஆம் ஆண்டில் இலங்கை, இந்தியா மற்றும் ஏனைய தெற்காசிய நாடுகள் உட்பட 16 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றை அடிப்படையாகக் கொண்டே ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த நாடுகளைச் சேர்ந்த மக்களின் வறுமைக்கான முக்கிய காரணங்களாக வேலை வாய்ப்பின்மை உணவுப் பொருட்களின் விலையேற்றம் என்பன விளங்குவதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பணவீக்கத்துடன் பொருளாதார சமநிலையை பேணுவதே இவ்வாறான வறிய நாடுகள் எதிர்நோக்கும் பிரதான சவால் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சமையல் எரிவாயுவின் விலை திங்கள் முதல் அதிகரிக்கும்?

வீட்டுப்பாவனைக்கான சமையல் எரிவாயுவின் விலை எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

காஸ் விலையை அதிகரிக்கக் கோரி சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபைக்கு விண்ணப்பித்துள்ளன. இதற்கான அனுமதி இவ்வார இறுதியில் கிடைத்தவுடன் முதலாம் திகதி முதல் காஸ் விலை அதிகரிப்படும் சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுப்பாவனைக்கான 12.5 கிலோகிராம் காஸ் சிலிண்டர் மற்றும் 2.3 கிலோகிராம் நிறை கொண்ட சிறியரக காஸ் சிலிண்டர் ஆகியவற்றின் விலைகளை அதிகரிப்பது குறித்து நுகர்வோர் விவகார அதிகாரசபை ஆராய்ந்து வருகின்ற போதிலும் எவ்வளவு ரூபாவினால் விலையை அதிகரிப்பது என்பது தொடர்பில் இறுதி தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை.

விலை அதிகரிப்புக்கான தேவைப்பாடு குறித்து நுகர்வோர் அதிகார சபைக்கு விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்த ஷெல் காஸ் நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளர் ரிமோயி சல்டின், விலை மீள் பரிசீலனையின் போது கவனத்தில் கொள்ளப்படும். காலப்பகுதியில் எண்ணெய் விலை அதிகரித்துக் காணப்பட்டதால் குறித்த சூத்திரத்திற்கு அமைய விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்கான அனுமதியை அதிகாரசபை இவ் வார இறுதியில் வழங்கும் என்றும் கூறினார்.

அரசாங்கமும் காஸ் சந்தைப் படுத்தும் நிறுவனங்களும் இணங்கிக் கொண்ட சூத்திரத்திற்கு அமைய இரு மாதங்களுக்கு ஒரு முறை காஸ் விலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அனுமதியை கோர முடியும். இருந்த போதும் காஸ் விலையை மறுபரிசீலனை செய்யும்போது இரு மாதங்களுக்கு முன்னரான எண்ணெய் இறக்குமதி விலைகளே கவனத்தில் எடுக்கப்படும்.

அதன் பிரகாரமே மே மாதத்தில் 12.5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டு பின்னர் ஜூலையில் 8 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## பிரதேச அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் நடாத்தப்படும் பிரதேச அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பீ.ஜோன்சனும் கௌரவ விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-3)

## தாச்சி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13ஆவது தாச்சி சுற்றுப் போட்டியில் நாளை சனிக்கிழமை மாலை 3.30மணிக்கு நவாலி சென்றொக் விளையாட்டுக் கழகம் எதிர் சாவக்காடு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் எதிர் சுதுமலை யுவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஓ)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

உதைபந்தாட்ட நாயகன் அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளB பிரிவுக்கான போட்டியில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகமும்எதிர் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ஓ)

## "பகவத்கீதை உபந்நியாசம்"

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஆத்மீக சபாவில் இன்று 42 ஆவது சுக்கிரவார ஆத்மீக நிகழ்வில் வழமைபோல பஜனாமிர்தம், திவ்விய நாமவளி அர்ச்சனை ஆராதனை, தியானம், நற்சிந்தனை ஆகியவற்றுடன் மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும் அத்துடன் கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என். தவராஜா(ஜே.பி) இன் பகவத்கீதை உபந்நியாசமும் இடம் பெறும்.

ஆத்மீக ஆர்வலர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா அழைக்கின்றது. (ஓ)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர்தேவஸ்தான (ஸ்ரீ கந்தையாச் சுவாமியார் சமாதி ஆலயம்) அலங்கார உற்சவம் 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பூச்சப்பறத்திருவிழாவும், 1ஆம் திகதி திங்கட்கிழமை கைலாசவாகனத் திருவிழாவும், 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 3ஆம் திகதி புதன்கிழமை பகல் 1008 சங்காபிஷேகமும் இடம் பெறும். (ஓ)

# நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நிகழ்வுகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் இரதோற்சவ தினத்தினை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகள் இடம் பெறும்.

நிகழ்வில் காலை 7மணி முதல் 8 மணி வரை சைவசித்தாந்த பண்டிதர் சி.சா. கமலநாதனின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும். 8 மணிக்கு "காவிக் கமலக் கழலுடன் சேர்த்தருள்வாய்" எனும்பொருளில் சைவப் புலவவர் அருட் சொல்வாரி செ.கந்த சத்தியதாசன் கதாப் பிரசங்கம் செய்ய உள்ளார்.

அவருக்கு அணிசெய் கலைஞர்களாக வயலின் சி.கஜன், மிருதங்கம் கலாவித்தகர் பிரம்மஸ்ரீ வரதராஜசர்மா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இராமநாதன்நுண்கலைப்பீட மாணவி செல்வி மதுமிதாவின் வீணைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது. (ஓ)

# தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கான காலநீடிப்பு

(அல்வாய்)

வெளிமாவட்டங்களில் கடமையாற்றி தற்போது யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்புப் பெற்று இம் மாதம் 31ஆம்திகதி வரை கடமையாற்ற அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நாட்டின் சூழ்நிலை, மாணவரின் கல்விநிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு 31.12.2008 வரை அதாவது மூன்றாந் தவணை முடியும் வரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கடிதமூலம் அறிவித்துள்ளார். இதனை வடமரட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு அறியத்தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

# அதிபர் பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்

வடமராட்சி கல்வி வலயத்தில் விரைவில் வெற்றிடமாக உள்ள யா/தேவரையாளி இந்துக்கல்லூரி தரம் Ic, யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம் தரம் II, யாழ் / நாகர் கோவில் மகா வித்தியாலயம் தரம் II ஆகிய பாடசாலைகளுக்கான விண்ணப்பங்களை அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்க முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே கடமை நிறைவேற்றும் அதிபர் நியமனத்திற்காக ஆசிரியர்களின் விண்ணப்பம் கவனத்திற் கொள்ளப்படும்.

விண்ணப்பிப்போர், இலங்கை அதிபர் சேவை /இலங்கை ஆசிரியர் சேவை தரம் I, இலங்கை ஆசிரியர் சேவை தரம் II - I ஐச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். I - C பாடசாலைக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்போர் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரியாக இருக்க வேண்டும். அத்துடன் ஆகக் குறைந்தது 3வருடகாலமேனும் சேவையில் இருக்கக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

இத்தகுதிகள் உடையோர் விண்ணப்பப் படிவங்களை வடமராட்சி கல்வி வலயக் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில்10-9-2008 க்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

பருத்தித்துறை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெற உள்ளது.


இக் கூட்டத்தில் சர்வதேச சிறுவர் தினம், 2009ஆம் ஆண்டு இலவச பாடநூல் விநியோகம், அதிபர் ஆசிரியர்களின் சம்பள ஏற்றப் படிவங்கள் அனுப்புதல் ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்பட உள்ளது.

க.பொ. த (உ/த) பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிபர்களுக்கு பதிலாக பிரதி அதிபர் இக் கூட்டத்தில் பங்கு பற்ற வேண்டும். பாடநூல் கோரல் படிவம் 2009 இன் ஒரு பிரதியை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு உடனடியாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன். க.பொ.த. (உ/த) பரீட்சை நடைபெறாத பாடசாலைகளில் 3ஆம் தவணை கற்பித்தல் நடவடிக்கைகளை 1-9-2008இல் ஆரம்பிக்கலாம் எனவும் பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் அறிவித்துள்ளார். (ஓ-19)

# "ஒன்பது ரூபாய் நோட்டு" திரைப்பட வீடியோ காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் கல்விசார்/ கலைத்துவம் சார் படக் காட்சித் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு இந்திய நெறியாளர் தங்கப்பச்சானின் நெறியாள்கையில் உருவான "ஒன்பது ரூபாய் நோட்டு" திரைப்படம் வீடியோக் காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (ஓ)




ஸ்ரீகல்கி பகவான் ஸ்ரீபகவதி அம்மாவின் 54ஆவது ஜென்மதின நிகழ்வுகள் அண்மையில் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக மையத்தில் கொண்டாடப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் பல்கலைக்கழக மாணவன் க.ரமணன் "தெய்வீக வாழ்க்கை" என்னும் விடயம் பற்றி ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## தெய்வீகத் தொடர் இசைப்பேருரை

நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்குவீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயமண்டபத்தில கான கதா வாரிதி பிரம்மஸ்ரீசி.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் "கந்தபுராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று வெள்ளிக்கிழமை "சூரசங்காரம்" என்னும் தலைப்பில் இசைப் பேருரை நிகழ்த்துவார். (ஓ)

## சிறப்புச் சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை சனிக்கிழமை மாலை 3மணிக்கு "முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட அடியார்கள்" எனும் தலைப்பில் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

அத்துடன் சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை மற்றும் அளவெட்டி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர் களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெறும். (ஓ)




## யாழ். செய்திகள்

## தேவாரப் பண் பயிற்சி

நல்லூர் கந்தசுவாமி ஆலய பூங்காவனத் திருவிழா அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றம், செல்லப்பா சுவாமிகளின்நினைவாலய அறங்காவலர்களினதும் அனுசரணையுடனும் தெய்வத் தமிழிசைச் செல்வர், துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே. எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் அவர்களால் மூத்தோருக்கான தேவாரப் பண் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்இப் பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளதனால் விரும்பிய்வர்கள் பங்குபற்றி பயன்பெறலாம். (ஓ)

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் "ஞானச் சுடர்" சஞ்சிகை ஆவணி மாத இதழ் இன்று வெள்ளிக்கிழமை 10.30மணியளவில் வெளியிடப்படும்.

இதன் வெளியிட்டுரையை இரா.ஸ்ரீ நடராசா ஆசிரியரும் மதீப்பீட்டுரையை க. நடேசன்(தெணியான்) இளைப்பாறிய பிரதி அதிபர் அவர்களும் வழங்குவார்கள். (ஓ-35)

## தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடாத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி முதல் 6.30மணிவரை எஸ்கணபதிப் பிள்ளையின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

அணிசெய்கலைஞர்களாக வயலின் ஆர் இராதாகிருஷ்ணன், தமிருதங்கம் எம். சிதம்பரநாதன், முகர்சிங் ரி. சண்முகசுந்தரம் ஆகியோர் பங்கு பற்றுவார்கள். (ஓ)

எல்லாச் சந்தர்ப்பத்திலும் பலாத்காரம் கூடாது என்பது கருத்தல்ல. தீமைக்கு அடி பணியும் நிலை ஏற்படும்போது பலாத்காரத்தைப் பிரயோகிப்பதே சிறந்தது. –டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# போர் புரியும் அதிகாரம் அரசுக்குக் கிடையாது

பயங்கரவாதத்தை ஒழிப்போம். அதின் பின்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிச் சிந்திப்போம் என்பது அரசின் நிலைப்பாடாகவுள்ளது.

பயங்கரவாதம் என்பதற்குப் பொதுவானதோர் வரைவிலக்கணத்தை எவராலும் முன்வைக்க முடியவில்லை.

ஒரு தரப்பிற்குப் பயங்கரவாதமாக இருக்கும் அமைப்பு இன்னொரு தரப்புக்கு வேண்டப்பட்ட அமைப்பாக இருக்கும்.

எனவே எது பயங்கரவாதம் என்ற முடிபை எடுப்பதில் சிக்கல்கள் இருக்கவே செய்கின்றது. அதேநேரம் அரச பயங்கரவாதம் என்ற சொற்பதம் பற்றிய சிந்தனைகளும், அதற்கான வகைமைகள் பற்றிய ஆய்வுகளும் நடந்த வண்ணமுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

பரந்து விரிந்து ஆழுந்து சிந்திக்கின்ற உலகப் பொதுமையில் குற்றவாளிகள் நிரபராதிகளாகவும், நிரபராதிகள் குற்றவாளிகளாகவும் இனங்காணப்படலாம்.

இத்தகைய இனங்காணல்கள் இறப்பிற்குப் பின்னதாகவும் இருக்கலாம் என்பது மறப்பதற்குரியதல்ல.

எனவே சமகாலத்தில் வாழும் ஒருவர் நிஜ வாழ்க்கையில் மட்டுமன்றி மறுமையிலும் குற்றவாளியாக இனங்காணாத வகையில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவையுண்டு.

# ஆசிரியர் சம்பளம் தொடர்பான பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி

ஆசிரியர் வேதன முரண்பாடு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வேதனப் பரிந்துரைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த பரிந்துரைகள் தொடர்பாக விரைவில் ஆசிரியர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட இருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த பரிந்துரைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அவை தொடர்பாக தம்முடன் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பமாகி 9 நாட்கள் நிறைவடைந்திருப்பினும் மதிப்பீட்டுப் பணிகள் இதுவரை உரியமுறையில் மேற்கொள்ளப்படாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சை விடைத்தாள்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

எனினும் விடைத்தாள்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்துள்ளார். (அ)

# வடக்குக் கிழக்கில் பணியாற்றும் வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொழில் புரியும் அரசாங்க வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரைவில் ஆராயப்படவுள்ளது .தென்பகுதியில் வசதி வாய்ப்புக்களுக்கு மத்தியில் வைத்தியர்கள் கடமையாற்றுகையில் வடக்கு கிழக்கில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் வைத்தியர்கள் கடமையாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவே இவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அவசர கடமைகளுக்கு அழைக்கப்படும் போது போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்க உதவிச் செயலாளர் டாக்டர் உபுல் குணசேகர தெரிவித்துள்ளார். எனவே இந்த வைத்தியர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தொடர்ந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து எதிர்வரும் 31ஆம் திகதி தீர்மானிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை முன்னிட்டு வடக்கு கிழக்கிலுள்ள தொழில் சங்கங்களின் தலைவர்களையும் செயலாளர்களையும் கொழும்புக்கு அழைத்து அப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான வைத்தியர்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிளைத்தொழிற்சங்க பிரதிநிதிகளை கொழும்புக்கு அழைப்பதற்கு என போக்குவரத்து வசதிகளை செய்து தருமாறு சங்க உதவிச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கேட்டபோது இந்த வைத்தியர்கள் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சிகள் இணைந்து கூட்டணி அமைக்க வேண்டும் - மங்கள சமரவீர

அரசாங்கத்தின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராட வேண்டுமாயின் எதிர்கட்சிகள் கூட்டாக இணைந்து ஓர் முன்னணியை உருவாக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

யுத்தம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான உண்மை நிலவரங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியதன் அவ

# நல்லூர் இரதோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன நிகழ்வுகள்

நல்லூர் இரதோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.50 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் இசை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களின் தெய்வீக இசை அரங்கு ஏ.அமிர்த லோஜனின் பண்ணிசைக் கச்சேரி, வி. சிவஞானசேகரத்தின் இசைக்கச்சேரி ஆகியன இடம்பெறும். 10 .30 மணிக்கு "முருகன் பெருமை" எனும் தலைப்பில் என். பரமேஸ்வரன் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார் அதனைத் தொடர்ந்து பி.ப. 1.30மணிவரை எல். திலக நாயகம் போல், செல்வன் ப. நவரத்தினம், செல்வி. நாகபூஷணி நவரத்தினம், எஸ்.குமாரசாமி ஆகியோரின் இசைக்கச்சேரியும் ஜோன் கவாஸின் கார்மோனியக் கச்சேரியும் இடம்பெறும். (இ)

# இனப்பிரச்சினைக்கு கௌரவமான முறையில் அரசு தீர்வு வழங்கும் - பாலித கோஹன

இலங்கையில் நீடித்துவரும் பிரச்சினைக்குக் கௌரவமானதும், ஸ்திரமானதுமான தீர்வொன்றை அரசாங்கம் வெகுவிரைவில் வழங்கும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

ஆசிய விமான பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமையான இராணுவ நடவடிக்கைகள்

# பராக் ஒபாமாவின் பின்னால் அணிதிரள ஆதரவாளர்களுக்கு ஹிலாரி கிளின்டன் அழைப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனநாயக கட்சியினர் தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பராக் ஒபாமாவிற்குப் பின்னால் அணி திரளவேண்டும் என அழைப்பு விடுத்த ஹிலாரி கிளின்டன் தான் ஒபாமாவின் பெருமைக்குரிய ஆதரவாளர் எனக்குறிப்பிட்டார்.

பராக் ஒபாமாவை ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக உத்தியோகபூர்வமாக நியமிக்கும் வகையில்இடம் பெற்ற அக் கட்சியின் இரண்டாவது நாள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஹிலாரிகிளின்டன் இவ்வாறு தெரிவித்தார்.


நீங்கள் எனக்காகவாக்களித்தவர்களாக இருக்கலாம். அல்லது பராக் ஒபாமாவிற்காக வாக்களித்தவர்களாகஇருக்கலாம் ஆனால் ஒரே கட்சிக்காக ஒரே நோக்கத்துடன் ஒன்றிணைய வேண்டிய தருணம் இதுவாகும் என அவர் வலியுறுத்தினார்.

பராக் ஒபாமா எதிர்வரும் நவம்பர் 4ஆம் திகதி நடைபெறவுள்ளஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளரான ஜோன் மக்கெயினை எதிர்த்துப் போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில்ஜனநாயக கட்சியினர் தம்மிடையேபிளவுபட்டு குடியரசுக் கட்சியினரிடம் தோல்வி காணக்கூடாது எனஹிலாரி கிளின்டன் வலியுறுத்தினார்.

ஒபாமா தற்போது என்னுடையவேட்பாளர் எனஹிலாரி கிளின்டன இதன் போது குறிப்பிட்டார்.

எமது நாட்டுக்கு அளித்த வாக்குறுதிகளையும் எமது மக்களின்நம்பிக்கைகளையும் முட்டாள்தனமான முறையில் வீணடித்த குடியரசுக் கட்சியைசேர்ந்த இன்னொருவர் வெள்ளை மாளிகைக்குவருவதை நாம் அனுமதிக்கக் கூடாது நாங்கள் அனைவரும் ஒரே குழுவாக இணைந்து செயற்பட வேண்டும் எம்மில் எவரும் மதனித்து நிற்கக்கூடாது என தெரி



வித்த ஹிலாரி கிளின்டன் கடந்த 8 வருடங்கள் போன்ற மேலும் நான்குவருட ஆட்சி எமக்குத் தேவையில்லைஎன்று கூறினார். (அ-6)

## சூடானில் கடத்தப்பட்ட விமானத்தின் பயணிகள் அனைவரும் விடுதலை

சூடான் நாட்டில் நியாலா நகரில் இருந்து கார்ட்டூம் நகருக்கு புறப்பட்ட விமானத்தை தீவிரவாதிகள் கடத்தினார்கள். அந்த விமானம் லிபியா நாட்டில் சஹாரா பாலைவனத்தில் உள்ள கப்ரா என்ற இடத்தில் தரை இறங்கியது.

எரிபொருள் இல்லாததால் தரையிறங்கிய அவ் விமானத்திற்கு அங்கு இருந்து பாரிஸ் நகரிற்கு செல்வதற்கு தேவையான எரிபொருள் வழங்கும்படி லிபியா நாட்டை அவர்கள் கோரினார்கள். அங்கு இருந்த போது அவர்கள் 95 பயணிகளை விடுவித்தனர். விமானத்தில் இருந்த அனைத்துப் பயணிகளும் விடுவிக்கப்பட்டனர் என்பதை எங்களால் உறுதியாக கூற முடியும் என்று லிபியா அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-6)

## உலக தரிசனம்

# இடுப்புக்கு கீழ் செயலிழந்தவர்களுக்கு சுயமாக நடக்க உதவும் உபகரணம்

## இஸ்ரேலிய பொறியியலாளரால் உருவாக்கம்

இடுப்புபகுதிக்குக் கீழ் செயலிழந்து படுத்தபடுக்கையாக இருப்பவர்களுக்கு சுயமாக எழுந்து நிற்கவும் நடக்கவும் படிகளில் ஏறவும் உதவக்கூடியவகையில் றொபோ உபகரணமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

றீவோக்என்ற மேற்படி உபகரணத்தை தமது உடலில் இணைத்துக் கொண்டு மணிக்கட்டில் பொருத்தப்பட்ட தூர இருந்து இயக்கும் கருவி மூலம் அவ் உபகரணத்தின்செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி விரும்பிய திசைகளில் நோயாளிகள் அசைய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உபகரணத்தை அணிபவர் முன்னோக்கி குனிகையில் அவர் நகர்விற்கு தயாராவதை உணரும். அவ் உபகரணத்திலுள்ள உணர்க்கருவிகள் கால்களில் பொருத்தப்பட்ட பகுதிகளின் அசைவைத் தூண்டிமுன்னோக்கி அடியெடுத்து வைக்க கட்டளையிடுகின்றன.

மேலும் இதன் போது நோயாளிகளால் பயன்படுத்தப்படும் கைத்தடியும் அவரது அசைவை இலகுபடுத்த உதவுகிறது.

இஸ்ரேலிய உயர் தொழில்நுட்ப நிறுவனமான ஆர்கோ மெடிக்கல்டெக்னோலொஜிஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரான பொறியியலாளர் அமித் கோபரால் தயாரிக்கப்பட்ட இந்த றொபோ உபகரணமானது டெல் அவிவிலுள்ள ஷெபா மருத்துவநிலையத்தில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.



இஸ்ரேலிய இராணுவத்தில் பணியாற்றும் போது ஏற்பட்ட காயத்தால் கடந்த 20 வருட காலமாக இடுப்புக்கு கீழான பகுதி செயலிழந்த நிலையிலுள்ள ராதிகெயோப் என்பவருக்கு இந்த உபகரணம் பரீட்சார்த்தமாக பொருத்தப்பட்டது.

இந்த உபகரணமானது தனது வாழ்க்கையையே மாற்றிவிட்டதாக ராதி கெயோப் தெரிவித்தார்.

நான் மீண்டும் நடப்பேன் என கனவிலும் நினைக்கவில்லை நான் காயமடைந்ததன் பிற்பாடு எவ்வாறுநடப்பது என்பதையே மறந்துவிட்டேன்இந்த றீவோக் உபகரணத்தை பயன்படுத்திஎழுந்து நிற்கையில் மகிழ்ச்சியாக உள்ளது மற்றவர்களைநேருக்குநேர்பார்த்து பேச முடிவது பரவசம் தருகிறது. என அவர் கூறினார். (அ-6)

# ஜோர்ஜிய நிலைமை குறித்து சீனா கவலை தெரிவிப்பு

தெற்கு அஸெட்டியாவிலும் அப்காஸியாவிலும் உருவாகியுள்ள நிலைமை தொடர்பில் சீன வெளியுறவு அமைச்சகம் முதல் தடவையாக கவலை வெளியிட்டுள்ளது.

தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேவில் ரஷ்ய அதிபர் திமித்ரி மெத்வதேவைச் சீன அதிபர் ஹுஜிண்டாவோ சந்தித்துள்ள நிலையில் இந்த கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனிடையே ஜேர்மனியின் சான்செல்லர் அங்கேலாமெர்க்கெல்ரஷ்ய அதிபரைத்தொலைபேசியில் தொடர்புகொண்டு தெற்கு அஸெட்டியா அப்காஸியா தாண்டி ஜோர்ஜியவுக்குள் ரஷ்யப் படையினர் தொடர்ந்து நிலை கொண்டிருப்பது என்பது ஜோர்ஜியாவுடன் ரஷ்யா செய்து கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை மோசமாக மீறும் செயலெனக் கூறியுள்ளார். (அ-6)


# டாக்டர் பஸ்லூர் ரஹ்மானின் வாரந்தோறும் இடம்பெறும் மருத்துவ நிகழ்ச்சி

டாக்டர் பஸ்லூர் ரஹ்மான் ( MBBS., MD, Phd (aus) அவர்களின் மருத்துவ நிகழ்ச்சி வாரந்தோறும் வெள்ளி மாலை 6.30 மணிக்கு தமிழன் தொலைக்காட்சியில் நடைபெறுகிறது. ரம்ஸான் பெருநாளை முன்னிட்டு ஒவ்வொரு நாளும் அதிகாலை 3.30-4.00 மணிவரை செப்டெம்பர் 2ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 2ஆம் திகதிவரை டாக்டர் பஸ்லூர் ரஹ்மானின் மகத்தான சாதனை படைக்கப்போகும் மருத்துவ நிகழ்ச்சி நடைபெறும். அதில் மிகமிக முக்கியமான முடிவுகளை தெரிவிக்க இருக்கிறார்.

மருத்துவத்துறையிலே மிகப்பெரிய புரட்சியை நிகழ்த்திக் கொண்டிருக்கும் டாக்டர் பஸ்லூர் ரஹ்மான் அவர்கள் மிகவிரைவில் யாழ்.நகரிற்கு விஜயம் செய்ய இருக்கிறார். அவருடைய மிகப் பெரிய கருத்தரங்கு நடைபெற இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

29.08.2008 வெள்ளி அன்று இருதயநோய் சம்பந்தமான பல முக்கிய இதுவரை நீங்கள் அறிந்தேயிராத மகத்தான விளக்கங்களை வழங்க இருக்கிறார்.

டாக்டர் ரகுராம்
உரும்பிராய்

(C/1454)



# Faculty of Arts, University of Jaffna

## Vacancy for Staff Assistant (on contract)

We are looking for a person with the following attributes to serve as staff assistant to assist the Co ordinators of the Arts & RAFA Study Programmes under the Quality Enhancement Fund (QEF) of the project to Improve Relevance and the Quality of Undergraduate Education (IRQUE), in the administration of the study programmes.

* Pass in three subjects at the GCE (A/L) Exam
* High level of competency in English
* Competency in MS Office packages
* Age not more than 45 years
* A minimum of two years experience in a similar capacity is pre ferred
* Salary and terms negotiable.

The duties of staff assistant would include serving as a receptionist in the Local Technical Secretariat (LTS) of the project at the Faculty of Arts, University of Jaffna, administrative duties within the office including dispatching and delivery within the University of all incoming and outgoing documents, letters, messages, e-mails etc, preparation of Microsoft excel and Microsoft word documents, maintenance of files of all documents and correspondences, and other clerical works.

The appointee should also assist the co ordinator in the preparation of monthly, quarterly and annual reports.

Application giving complete bio-data with copies of relevant certificates should be forwarded to the Director/LTS, IRQUE Project, University of Jaffna on or before 15th September 2008.

**Director/LTS**
**IRQUE Project**
**University of Jaffna**
**28.08.2008**

(C/1456)



## University of Jaffna

### Intensive Course in English and Information Technology - 2008

### (Under the IBG of the IRQUE Project)

**Interested students from among those who sat their Final Examinations in Arts or Management Studies and Commerce in the academic 2006/07 and wish to follow the above courses are requested to register their names at the Local Technical Secretariat (LTS) Office of the IRQUE Project, University of Jaffna on or before 17.09.2008.**

Director/LTS
IRQUE Project
University of Jaffna
28.08.2008

(C/1455)

# நல்லைக்குமரன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் 2008


அன்பர்கள் ,நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் நல்லூர் முருகனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

புத்தம் புதிய துவிச்சக்கரவண்டிகள், T.V , டெக் வகைகள், றேடியோவகைகள், அவற்றிற்கான உதரிப்பாகங்கள், அன்ரனா, வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

இ.சு.பேரம்பலம் சகத நிறுவனம்





இல-50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 222 2988, 3096
Fax:- 222 2368


## விதியதனை வெல்வாய்

வர்ண பகவான் மழை முகிலைக்
குடையாய் பிடிக்க – மகிழ்ந்து
வாயு பகவான் இளம் குளிர்
காற்றைத் தென்றலாய் வீச
சூரிய பகவானும் இடையிடையே
பெருமான் திவ்வியழகை ரசிக்க
இளநங்கையரும் ஆடவருட் குழந்தைகளும்
ஆடிப்பாடியாடும் பத்தர் குழாமும்
அடியளித்தும் அங்கப் பிரதிட்சை
செய்தும் அரோகரா ஒளியெழுப்ப
விடிவொன்றை நீ தருவாய்யென
இன்னும் நம்புகிறோம் குமரா!
வழியேதும் தெரியவில்லை வருவாய்
நீ தேரேறி விரைவில் முடித்துவைக்க
குறை காணவில்லை நான் உன்னில்
நல்லூரா விதியதனை வெல்வாய்!


இராம ஜெயபாலன்.


அகிலத்தின் நாயகனே ! எம் அல்லல் தீர்த்திட உன் அருள் நாடி நிற்கின்றோம் நாயகனே!



இதோ 171 ஸ்ரான்லி வீதியில்

உங்களது நன்மதிப்பு பெற்ற பிரீடம் எல்.எம்.எல். ஸ்கூட்டர் சைக்கிள் , விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



S.P.N. MOTORS

எஸ்.பீ.என். மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அவனியெங்கும் அமைதி காத்திட ரதபவனி வரும் நல்லூர் முருகனே உன் அருள் வேண்டி நிற்கின்றோம்

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்






கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

தொ.பே. 222 2833 ,222 7144

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



அவனியிலே சமாதானம் நிலைத்திட அருள் வேண்டி நிற்கின்றோம்

ஏக விநியோகஸ்தர்

யுனிலிவர் ஸ்ரீலங்கா லிமிற்டெட் எனேர் ஜஸ்சர் லங்கா லிமிற்டெட் பொண்ரேறா பிறான்ட் லங்கா (பிறைவேற்) மலிபன் பிஸ்கட் உற்பத்தியாளர்,லிமிற்டெட், செல்காஸ் லங்கா லிமிற்டெட் U.S.Aசமையல் எண்ணெய் இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்



எஸ். வி. முருகேசு

தொ.பே. 222 2911 - 222 2202

154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# நல்லூரான் தேரடியில்

## யோகர் சுவாமிகள் பெற்ற சிவயோகம்

நல்லூர் பெருவிழா தொடங்கியதும் யாழ்ப்பாணம் பக்திப் பரவசமாக காட்சியளிக்கும் நல்லையம்பதி உலகெங்கிலும் வாழும் தமிழர் மத்தியில் திருவிழாக் காலத்தின் போது ஆன்மீக அலைகளைப் பரப்புவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அத்துடன் நல்லூரை நாடி நலம்



பெற்றயாழ்ப்பாணத்து சித்தர்கள், யோகியர்கள், அடியார்கள் நம் மனத்தில் நடமாடுவதையும் உணரமுடிகிறது. யாழ் மண் ஒரு தவபூமி. அங்குகடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள், சோல்பரிப் பிரபுவின் மகன் சந்த சுவாமிகள், ஜேர்மனிய கௌரிபாலர் சுவாமிகள், அமெரிக்கரான ஹவாய் தீவைச் சேர்ந்த சுப்பிரமுனிய சுவாமிகள் நல்லூரான் திருத்தலத்தை நாடி அவனருள் பெற்றுய்ந்தனர்.

கடையிற் சுவாமி கள் பெங்களூரில் உயர் நீதிமன்ற நீதிவானாக இருந்தவர். இவர் தூக்குக் கைதி ஒருவனுக்கு ஒருமுறை தூக்கு தண்டனை விதிக்க நேர்ந்தபோது ***இவனுக்கு தூக்கு தண்டனை விதிக்க நானார்*** என்ற உணர்வு தோன்ற உத்தியோகத்தை துறந்து நேரே யாழ்ப்பாணம் வந்து பெரிய கடையிலும நல்லூர் வீதியிலும் தமது காலத்தைக் கழித்தார். கறுத்த மெல்லிய உருவமும் சுந்தல் உடையும் ஓட்டைக் குடையும் கொண்டு நல்லூர் வீதியால் மாலை வேளைகளில் ஓடுவார். அவர் பின்னால் ஓடுபவர்கள் மேல் காறி உமிழ்வார். அப்பொழுது அத் துப்பல் பட்டவர் பிணிதீரும். அவர்தம் பிரச்சினை தீரும் .சுவாமிகள் நடத்திய அற்புதங்கள் புத்தக வடிவாக இன்றும் யாழ்ப்பாணத்தில் பெறக் கூடியதாக உள்ளது.

நல்லூரின் தேரடிப்படி மேலே விசரனாகக் காட்சியளித்த செல்லப்பா சுவாமிகளை கடையிற் சுவாமிகள் ஒருநாள் உற்றுநோக்கி "இவனுக்கு விசர் முற்றிவிட்டது இவனை அவிழ்த்துவிடுங்கள்'' என்று அங்கு நின்றவர்களிடம் கூறினார். பக்கத்திலிருந்த கடலைக் காரியிடம் ரூபா வாங்கி வெற்றிலையில் வைத்து தம்மிடம் இருந்த குடையை தலையில் பிடித்து "ஓட்டா'' என ஆசீர்வதித்தார். செல் லப்பர் விசரனாகவே நடித்தார்.

ஊர் உறங்கும் வேளையில் பாதிச் சாமத்தில் நல்லூரான் மூலஸ்தானத்தை நோக்கி பரம பிதாவே பரமபிதாவே எனி கத்துவார். உறவினர் உணவைக் கொடுத்தால் அது நஞ்சு என்று தூர எறிந்துவிடுவார். சில வேளைகளில் தாம் சமைத்து சா ப்பிடுவார். அதிகமான வேளைகளில் வயிற் றை பார்த்து நீ பட்டினிை சுறுக்கிைத்த உணவை நாய், குருவிகளுக்கு போட்டு வேடிக்கை பார்ப்பார். இப்படியான வேளையில் தான் யோகர் சுவாமி கள் இளமைப் பருவத்தில் செல்லப்பரை தேரடியில் சந்திக்க நேர்ந்தது யோகரைப் பார்த்த செல்லப்பர் சிம்மக் குரலில் "யாரடா நீ பாரடா நீ உள்'' என்று கர்ச்சித்தார். செல்லப்பரின் முதல் பார்வையிலே யோகர் சுவாமி கள் குருவருளைப் பெற்றுவிட்டார். அதை அவர் தேரடியில் தேசிகனை தரிசித்தேன். அன்றே யான் பெற்றேன் அருள் என்று தேரடியில் நான் பெற்ற சிவ யோகம் சொல்ல முடியாத சுகத்தை தனக்கு தந்து விட்டது என்றும் நற்சிந்தனையில் பாடியுள்ளார்.

செல்லப்பா யோகசுவாமிகளையும் கதிரவேலு என்பவரையும் 45 நாட்கள் தேரடியில் நிர்விகல்ப சமாதியில் இருத்தினார். 45ஆம் நாள் இருவரையும் துரத்திவிட்டார். யோகர் சுவாமிகள் உறவினர்கள் செல லப்பர் சுவாமிகளிடம் யோகரைப் பற்றி விசாரிக்க "அவன் செத்து விட்டான்'' என செல்லப்பா தேசிகர் கூறினார். இதனால் மனக் கவலையடைந்த யோகரின் உறவினர்கள் அவருக்கு செய்ய வேண்டிய இறுதிக் கருமங்களை செய்தனர். திடீரென ஒரு நாள் யோகர்சுவாமி திரும்பி வரக் கண்ட உறவினர்கள் செல்லப்பரிடம் இதுபற்றி வினவ அவர் "நான் இப்பவும் சொல்கிறேன். யோகன் எப்பவோ செத்துப்போய்விட்டான். நான் ஒருநாளும் பொய் பேசுவதில்லை'' இந்த விசரனிடம் எமக்கென்ன பேச்சு என யோகரின் உறவினர் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

யோகர் சுவாமிகள் கொழும்புத்துறையில் இருந்தாலும் அவரது உடல், பொருள், ஆவி எல்லாம் நல்லூரானிலும் செல்லப்பரிடத்திலுமே இருந்தது. செல்லப்பரை யோகர் நல்லூரானாகவே கண்டார். இறைவனே மானிட வேடத்திலும் வந்ததாக கூறுவார். வேறு சிலரும் செல்லப்பரின் மகிமையை அறிந்தனர். செல்லப்பர்தான் எடுத்த விசர்க்கோலத்தை நன்றாக நடித்தார் என்று யோகர் சுவாமிகள் அடிக்கடி கூறுவார். யோகர் சுவாமிகள் நல்லூரான் திருவடியே எமக்கு என்றும் துணை என்று எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்று ஒரு பொல்லாப்பும் இல்லை என்றும் பஞ்சம் படையைக் கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை என்றும் எமக்கு அருளியுள்ளார். யோகர் சுவாமிகள் நடமாடிய காலத்தில் ஆண்டிமுதல் அரசர் வரை பல்வேறு சாதி சமயத்தினரும் அவரை அண்டி அருள் பெற்றனர். அவருக்கு பல உத்தம சீடர்கள் இருந்தனர்.

கைதடி மார்க்கண்டு சுவாமிகள் நில அளவைத் திணைக்களத்தில் கடமையாற்றியபோது "வடதிசை காட்டும் கருவியைப் போலிரு'' என அருள் வாக்குக் கூறி அவர் இளைப்பாறிய பின் கைதடியில் உள்ள எமது தகப்பனாரின் இல்லக் காணியில் உள்ள ஒருமடத்தில் தங்கவைத்தார். இது 1950 ஆண்டு தையில் நிகழ்ந்தது அப்பொழுது சிறியேன் பிறக்கவில்லை. அப்பொழுது யோகர் சுவாமிகளாய் அவருக்கு ஒரு பானை குடிநீரை குளிராக வைத்திருக்கக் கொடுக்கப்பட்டது. மார்க்கண்டு சுவாமிகள் 1984ஆம் ஆண்டு சமாதியாகும் வரை அப் பானையிலே குடிநீர் வைத்துப் பருகுவார். நான் சிறுவனாக இருந்த போது மார்க்கண்டு சுவாமிகளுக்கும் யோகர் சுவாமிகளுக்கும் ஏதாவது சிறு தொண்டாற்ற செல்வேன. அப்பொழுது அப் பானையில் தண்ணீர் எடுக்கச் செல்லும் போது சில வேளை கவனக்குறைவாக இருந்தால் "இந்தப் பானை உனதீ கொண்ணடா அதைக் கவனமாக பாவி'' என அறிவுரை கூறுவார்.ஏனெனில் யான் பிறந்தது 1950 ஆனியில் இப் பானை 1950 தையில் யோகர்சுவாமியால் வழங்க ப்பட்டது.

மார்க்கண்டு சுவாமிகள் ஒருநாள் நல்லூர் தேருக்கு செல்ல ஆசைப்பட யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளின் உடம்பைக் காட்டி "இது தான் நல்லூர் இதுதான் தேர்'' என்று அருளி பின்னர் தேருக்குச் செல்லு மாறு பணித்தார்.

யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளுடன் கைதடியில் சோல்பரிப் பிரபுவின் மகனை தங்கவைத்து ஆன்மீக பயிற்சிபெறச் செய்தார். சோல்பரிப்பிரபுவின் மகனுக்கு 'சந்தசாமி' தீட்சா நாமம் வழங்கப்பட்டு "தனித்திரு விழித்திரு'' எனும் அருளுபதேசம் வழங்கப்பட்டது. சந்தசுவாமிகளும் கைதடியிலிருந்த காலத்தில் நல்லூருக்கு கால்நடையாக பாதயாத்திரை செல்லும் பழக்கத்தைக் கைக்கொண்டிருந்தார். சோல்பரிப் பிரபுவின் மகனுடன் சேர்ந்து திரிந்த ஜேர்மன் சுவாமிகள் (கௌரிபாலர்) அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பன்றிக்குட்டி சுவாமிகளும் யோகர் சுவாமிகளின் ஆளுமைக்குட்பட்டார்கள். ஜேர்மன் கௌரிபாலா என்பவருக்கு "சும்மா இரு'' எனும் மந்திர உபதேசம் வழங்கப்பட்டது. அவர் அதை கையில் "சும்மா இரு'' என பச்சை குத்தி திரிந்தார். இவர்கள் நல்லூர், கதிர்காமம், செல்வச் சந்நிதி போன்ற முருக தலங்களில் அதிகமாக காணப்பட்டனர்.

அமெரிக்கரான சுப்பிரமணியசுவாமிகள் முதன் முதலில் நல்லூரானை வணங்கும் போது யோகர் சுவாமி மூலஸ்தானத்தில் வீற்றிருக்கக் கண்டு யோகர் சுவாமிகளின் சீடராகி அமெரிக்க ஹவாய்த்தீவில் சைவசித்தாந்த மடம் நிறுவினார். அது இன்றும் வெளிநாட்டு அன்பர்களால் சிறப்பாக நடத்தப் பெற்று வருகிறது.

நாவற்குழி ஆசிரியராக இருந்த செல்லத்துரை மாஸ்ரர் சுவாமிகளின் சீடராகி செல்லத் துரை சுவா மிகள் எனபெயர்பெற்றுசிவதொண்டன் சபையை சிறப்பாக நடத்தி வந்தார். அவர் யோகர்சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை பல நூல்கள் மூலம் அடிய வர்களுக்கு அறியத் தந்துள்ளார். ஆனால் அவருக்கு யோகர் சுவாமிகள் "எங்களைப் பற்றி ஒருவராலும் எழுதவும் முடியாது என்றும் இல்லை இனியும் பிறக்கப்போவதில்லை'' என்று அருளியுள்ளார்.

ஆத்ம ஜோதி முத்தையா இளமைக் காலத்தில் ரமண மகரிஷியின் பக்தராக இருந்து யோகர் சுவாமியைப் பற்றி கேள்விப்பட்டு யோகர் சுவாமி யைத் தரிசிக்க சென்ற வேளை "இவரும், எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்'' என ஆசீர்வதித்தார்.

முத்ததையா அவர்கள் ஏழாலையை பிறப்பிடமாகக் கொண்டவர். யோகர் சுவாமி வாழ்ந்தகாலத்தில் ஆத்ம ஜோதியில் யோகர் சுவாமியின் படத்தை பிரசுரித்து சுவாமியின் புகழை நாடெங்கும் பரப்பியவர்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் யோகர் சுவாமிகளின் அருளுக்கு பாத்திரமானவர். துர்க்கையம்மன் கோவில் தொடங்க முன்னரே ஒருநாள் அந்த இடத்தை சிவத் தமிழ்ச் செல்விக்குக் காட்டி "இங்கே ஒரு பெரும் தலம் அமையும் அதை நீ நிர்வகிப்பாய்'' என ஆசி கூறினார்.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் யோகர் சுவாமி பற்றி வெளிநாடுகளில் சொற்பொழிவாற்றும்போது குறிப்பிடத்தவறுவதில் லை. அத்துடன் நல்லூர் ஆலய வீதியில் மணி மண்டபம் நிறுவி நல்லூர் திருவிழாக் காலங்களில் தினம் தோறும் அன்னதானம் , சொற்பொழிவு ஆகியன இடம்பெறுவதையாவரும் அறிவர்.

இறுதியாக யாழ்ப்பாண உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த அக்பர் என்னும் முஸ்லிம் மதப்பெரியார் யோகர் சுவாமிகளின் நண்பராக இருந்தவர். அடிக்கடி யோகர் சுவாமிகளை தனது காரிலேற்றிச் செல்லும் பெரும் பேற்றை பெற்றவர். ஒருநாள் யோகர் சுவாமிகளுடன் காரில் நல்லூர் வீதியால் வரும்போது காரை நிறுத்தி நல்லூரானை கும்பிடச் சென்றார். அவர் யோகர் சுவாமிகளையே மூலஸ்தானத்தில் கண்டு பதைபதைத்தார். அவர் ஏதாவது கூட்டத்தில் பேசும்போது "யோகர் சுவாமிகளும் நல்லூரானும் இருக்கும்வரை யாழ்ப்பாணத்தாருக்கு ஒரு குறையும் இல்லை'' என்று குறிப்பிடுவார்.

**ம.சிவயோகசுந்தரம்**
**(நல்லூரான் சிவா)**
**பொஸ்ரன் அமெரிக்கா**

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



கலியுக வரதனாகிய கந்தப் பெருமான் இன்று நல்லூரிலே சித்திரத் தேறிரேறிச் சிங்காரப் பவனி வருகின்றான். தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்க இன்று ஷண்முகப் பெருமானாக ரதத்திலே ஆரோகணிக்கின்றான். இது ஒரு பொன்னான நன்னாள்.

வள்ளியும் தெய்வானையும் அருகருகே அமர்ந்திருக்க அலங்காரமான தேரிலே ஆரோகணித்து வரும் அழகுத் திருக்காட்சி காணக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். புனித நகரான நல்லையம்பதியிலே அருள்பாலித்துக் கொண்டு வீற்றிருக்கும் கந்தன் ஈழம் வாழ் மக்கள் எல்லோருக்கும் அமைதியும் சுபிட்சமும் சமாதானமும் நிறைந்த நல்ல சுகவாழ்வு கிடைக்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம். இதுகாலம் வரைபட்ட துயரம் விலகி ஆனந்த மயமான இன்ப வாழ்க்கை மலர வேண்டு மென நாம் விரும்புகின்றோம். அல்லலும் அவலமும் நீங்கி அமைதி கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குரு மஹா சந்நிதானம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## தேரிலே தேற்றிட வாராய்

சிவனுமை மைந்தா செந்தமிழ்த் தலைவா
சித்திரத் தேரிலே தேற்றிட வாராய்
தவநிறை ஞானியர் வழிபடு முருகா
தங்கத் தேரமர்ந்து தாங்கிட வர்ராய்

கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்

அனைவருக்கும் முருகன் அருள் என்றும் கிடைக்கட்டும்
பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்
ஜெகன் களஞ்சியம்
இல.285,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5035

தேரேறி வரும் நல்லூர்க் கந்தனே நின்னருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்
குறித்த தவணையில் ஓடர் நகைகளை தரமான 22 கரட் தங்க நகைகளில் செய்து தர யாழ் நகரில் நம்பிக்கையான நகைமாடம்



மைதிலி நகைமாடம்
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7902, 077 6092154
புத்தம் புது டிசைன்களில் குறித்த தவணையில் தரமாக செய்து தர
YARL MAITHILY JEWELLERS
யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
157, Sea Street, Colombo -11
Tel: 011 - 2396239, 077 - 6092154



# நல்லைக்குமரன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் 2008



## மாண்பு மிகு வேலவனே

தேர் ஏறி வலம் வருவாய்
ஊர்க் கோலம் காண்பதற்கு
ஏரோடும் சீரோடும்
ஏற்றமுடன் வீற்றிருந்தோர்
சேற்றில் நனைந்துழுது
சோறு எமக்கு தந்தவர்கள்
மர நிழலில் தூங்குவதும்
மடிப் பிச்சை ஏந்துவதும்
மாறுதற்கு அருள் பொழிவாய்
மாண்பு மிகு வேலவனே

*நடராசா சந்திரலிங்கம்*
*அச்சுவேலி*

## தேரில்வரும் வேல்முருகா

நல்லூரில் நாம்காணும் நல்லை முருகா
நல்லமைதி நாட்டில்வர வழிகாட்டுமையா
வெள்ளியின்று தேரில்வரும் வேல்முருகா
வாட்டமின்றி நாம்வாழ வழிகாட்டுமையா
இல்லாரும் உள்ளோரும் இருளில்லாது
இன்பஒளி இணைவதற்கு வழிகாட்டுமையா
தொல்லைதரு தீயவற்றை வேரோடகற்றி
தொண்டர் துயர்தீர வழிகாட்டுமையா!

*குளப்பிட்டி க. அருமைநாயகம்*

## செல்வச் சீராளனே வலம்வருக

நல்லூர்க் கந்தன்
செல்வச் சீராளனாய்
தங்கத் தேர்மீதேறி
வலம் வருகையிலே
நான் செய்த பாவம் எல்லாம்
நீங்கிப் புண்ணியம் பெற்றேன்
உன் திருவுலாவைக் காண்க
கண் கோடி தேவையே

*சுப்பிரமணியம் ஜெயசீலன்*
*யா/ஹாட்லிக் கல்லூரி*

## வெவ்வினை தீர்க்க நல்லூரில் உறைபவனே

கனிக்கென மயிலேறி வலம் வந்தவனே
தனக்கென மலையேறி நின்றவனே
தாய்தந்தை விட்டு சென்றவனே
தரணி யெல்லாம் மங்களம் தருபவனே
கன்னியிருவரை கரம் பிடித்தவனே
எண்ணியவரம் அருள்பவனே
வேழமுருகனின் சோதரனே வேல் பிடித்தவனே
வெவ் வினைகள் தீர்க்க நல்லூரில் உறைபவனே

*அல்வையூர் யோகி (த. யோகநாதன்)*

## தேரிழுக்கும் பெருவிழா

நல்லைப்பதியில் திருவிழா நல்ல திருவிழா
தேரிழுக்கும் பெருவிழா
ஊரில் உள்ளோர் அனைவரும்
ஒன்று கூடும் ஒருவிழா
தேரோடும் வீதியில் தேச மக்கள் திரள்கிறார்
கந்தன் புகழ் பாடியே தரையில்
வீழ்ந்து உருள்கிறார் – உமை
மைந்தன் அருள் நாடியே
காவடியும் சுமக்கிறார்

*எஸ். கே. மனோகரன் சுன்னாகம்*

## இடரினைத் தீர்ப்பாய்

கன்னியர் இருவ ருந்தன்
கழலிணை இறைஞ்சி நிற்ப
பன்னிரு கையா நீயும்
பாங்குடன் வாறாய் தேரில்
துன்னிய அடியோம் நாங்கள்
துதிக்கிறோம் அருளை வேண்டி
இன்னருள் தந்து எங்கள்
இடரினைத் தீர்ப்பாய் ஐயா

*சி. வெற்றி வேலு*
*வட்டுக்கோட்டை*

## கொற்றவா தேரேறி வருகவே!

கொற்றவா தேரேறி வருகவே – எம்
கொடுமைகள் யாவும் களையவே!
இத்தரை மீதினில் நாம் படும்
இன்னல்கள் யாவும் நீக்கிடவே
ஏறிவா தேரினிலே நல்லையிலே
சாதிகள் இறந்து சமத்துவம் பிறந்திட
சண்டை சச்சரவுகள் யாவும் ஒழிந்து
சமதர்ம வாழ்வொன்று
எங்களுக்குக் கிடைத்திட
திருவீதி வலம் வந்துவிடு
நல்லதொரு தீர்வைத் தந்து
நாளும் நாம் படுந்துயர் தீர்த்து
எல்லையில்லாத இன்ப வாழ்வை
எமக்களித்து ஏற்றம்பெற வைத்துவிடு!

*செல்வநாயகம் ரவிசான்*
*குப்பிளான்*

## உனக்கேது இடர் சொல்வாய் நெஞ்சே

சரவணப் பொய்கையிலே வந்துதித்த
சக்தி சிவபாலன்
பகை நாசம் செய்தற்கு தேரேறிவரும்
உமைபாலன்
மரகத மணித் தேரேறி வரும் காட்சி காண
கண்ணிரண்டு போதாவே – உந்தன்
பாவ வினை அறுக்க நல்லை
பன்னிருகை வேலவன் உன்
அருகு வர உனக்கேது இடர்
சொல்வாய் நெஞ்சே

*நிமல்வேணி ஜீவராஜ்*

## அமைதி வரத் தேர் இழுப்போம்

முடித் தேங்காய் கொண்டுவந்து
முன்னிலையிலே குவித்து
அடிப்போமே தேரடியில்
ஆறுமுக சுவாமியார்க்கு
ஓம் முருகா என்றுரைத்து
ஒரு மனதாய் வடம்பிடித்து
நாம் இருக்கும் நாட்டினிலே
அமைதிவரத் தேர் இழுப்போம்

*கா. கார்த்திகேசு*
*நல்லூர்*

## சமாதானம் பிறக்கும்


கண்ணைக் கவரும் வண்ணத் தேரில் முருகன் வருகிறான்
பண்புடையோரின் குறைகளைக் கேட்க வருகிறான்
விண்ணவரும் வியக்கும் நல்லூரின் விழாக்கோலம் காண்கிறான்
தன்முன் விம்மியழும் விதவைகளையும் பார்க்கின்றான்
மண்ணில் மலிந்த கண்ணீர்க் கதைகளையும் நினைக்கின்றான்
வறுமையகற்றி வாழ்விடம் சிறக்க வரம்தர எண்ணுகிறான்
எண்ணியே விட்டான் இனியும் தாமதமில்லை
சமாதானம் பிறக்கும் எம் நாடு சிறக்கும்

*சி. காசிப்பிள்ளை கொடிகாமம்*

## தேரேறி வருவாய் அழகனே!

அரனின் குருவே பார்வதி மைந்தா!
அயனை சிறைவைத்த ஏரகப் பொருளே!
சுரரைக் காத்த சேனா பதியே!
அகத்தியர்க்கு தமிழை செப்பிய கோவே!
பேதங்கள் நீங்கி ஒற்றுமை பெருகி
ஊர் கூடி நல்லூரில்; வடம் பிடிக்க
ரதமேறி வரவேண்டும் நல்லைக்குமரா!
நின் பதம் போற்றி வணங்குகிறோம்
பக்தர் குறைதீர்க்க – நீ வரவேண்டும்
ரதமேறி நல்லை வீதியிலே

*ஜெ. வினோத் யாழ்ப்பாணம்*



## கான மயிலேறி வா கந்தா...

எண்ணத்தில் நிறைந்த எழில் வேலா
நல்லை பதி வாழ் குருநாதா
ஒரு நாளும் மறவேன்
உன் திருநாமம்
தினம் நானும் தொழுதேன்
உன் மலர்பாதம்
சூழும் வினைகளைச் சுட்டெரிக்க
சுடராக வந்தாய்
சிவன் நெற்றிக்கண்ணில்
பாடும் இதயம் பரவசமாக
பறந்தோடி வா
கான மயிலேறி

*வி. யோகேஷ்*

## கந்தன் திருவடிக்கு

சிவன் உமை பாலகனே நல்லூர்க் கந்தா
எம்மை சிருஷ்டிக்க வேண்டும் ஐயா நல்லூர்க் கந்தா
தேர் ஏறிவாருமையா நல்லூர் கந்தா
தேவர் தலைவனே நல்லூர்க் கந்தா
பிரணவத்தின் மெய்ப்பொருளே நல்லூர் கந்தா
பிரம்மனை சிறைபிடித்தே நல்லூர் கந்தா
தீராத வினை தீர்ப்பவனே நல்லூர் கந்தா
தீமை பல போக்கிடுவாய் நல்லூர் கந்தா
சரணம் சரணம் ஐயா நல்லூர் கந்தா
உன்னடி சரணடைவோம்

*புலோலி பிரசாந்*

## தேர்வீதி இன்றுவரும் திருமுருகா!

தேவுலகோர் தேமலர் தூவிநிற்கத்
தேரூர்ந்து இன்றுவரும் திருமுருகா!
நாவுலகோர் நாவிசைத்து நாதமூட்ட
நாடிநல்லை வலம்வரும் நற்குமரா!
பாவுலகோர் பாமாலை பாதஞ்சூட்டப்
பாடிடும் பக்தர்குழாம் பரவிஏத்தப்
பூவுலகப் புகழ்நல்லை நாயகனே!
பூரித்தோம் அருள்தர வாரும்ஐயா!!

*டானியல் – தேவமதுரம்*
*கலைஞானச்சுடர்*

## சண்முகா நீயும் தேரேறி வரவேண்டும்

தக்கன வளம்பெற தகாதன அழிந்திட
சண்முகா நீயும் தேரேறி வரவேண்டும்
திக்கெட்டும் திகழ்ந்திட திசையாவும் ஓங்கிட
ஆறுமுகா நீயும் ஆரோகணித்து வரவேண்டும்
நேர்த்திகள் பலித்திட நினைத்தவை செழித்திட
வேலவா நீயும் வேலெடுத்து வரவேண்டும்
தீர்ப்புகள் நீதியோடு நியாயமாய் நிலைத்திட
கடம்பா நீயும் களிப்போடு வரவேண்டும்

*வேணடியான்*

# நல்லைக்குமரன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் 2008

## ஆறு முகத்தோடு அபய கரம் காட்டி தேறுதலைத்தந்து தேச நலன் காக்க நல்லைக் கந்தன் தேரேறி வருகிறான்



முருகப் பெருமான் இடத்திலே அமையும் கருணை அனைவராலும் விரும்பி அனுபவிக்கப்படுவதாகும் எவர் எவர்க்கு எவ்வாறெல்லாம் அருள் புரிய வேண்டும் என்ற கருணை உள்ளம் கொண்ட கலியுக வரதன் கந்தக்கடவுள் உலகிலேயே உள்ள இயல்புகள் எல்லாம் கொண்டு இயற்கையுடனானவனாகவும் இயற்கை தீரனாகவும் விளங்குபவன். அடியவர்கள் வருந்தி அழைக்கும் போதெல்லாம் வேலோடும் மயிலோடும் தோன்றி அருள்புரிபவன். ஆறுமுகவன் ஐந்து முகங்களை உடைய சிவப்பரம் பொருளினால் தோற்று விக்கப் பட்டவன் ஆறுமுகன் .

முருகப்பெருமானின் அவதார மகிமை பற்றி சிந்தித்தால் அக்கடவுளது பரங்கருணை தெளிவாகப் புலப்படும். சிவபெருமானது நெற்றிக்கண்ணிலே இருந்து அக்கினிப்பொறியாக சரவணப்பொய்கையிலேயே உதித்தவன் ஆறுமுகன். உமையாள் பிரித்தெடுத்து அணைத்து தாயாகி நின்று இத்தரணி வாழ்வதற்குரிய கந்தன் எனும் மைந்தனை தந்தருளினான்.

இதனாலேயே ஆறுமுகனை “உமையாள் பயந்த இலஞ்சியமே” என அருணாகிரி நாதர் அழைத்தார்.

முருகனை செந்தமிழாலும் பாடி வழிபடலாம். கொடுந் தமிழாலும் பாடலாம். ஏனெனில் தமிழாலே வைது - நிந்தித்துப் பாடினாலும் அதனை பெரு மனதோடு ஏற்றருள்பவன் முரு கன். இதனாலேயே ‘முத்தாமிழால் வைதாரரையும் வாழ வைப் போன்’ என்கிறார் அருணகிரிநாதர். செயலாலே தீய வை புரிந்தா ரேனும் குமாரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்று கந்தபுராணம் பாடிய கச்சியப்பசி வாச்சாரியார் கூறுகின்றார்.


முருகணை வலிமையும் ,அழகும் அருளும் அன்பும் பொருந்திய பெருங்கடவுள் என்ற கருத்தில் கந்தபுராணம் காவிய நாயகனாக்கிப் பாடுகின்றது.

தாரகன்,சிங்கன்,சூரன் ஆகியோரது செருக்கடக்கிய செம்மல் முருகப்பொருமான் ‘நான்’ என்னும் அகந்தையையும் எனது என்னும் மமதையும் ஆணவமும் அடக்கிய கதையின் தனமுதற் பரம்பொருளே முருகப்பெருமானே யாவார். ‘சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்’ என்ற வரிகளுக்கு இன்றும் தனிப்பெரும் தெய்வமாக நின்று பெருமை பெறு பவ்ன் முருகன்.

முருகப்பெருமானின் முழுக்கருணையும் கிடைக்குமானால் அதற்கு நிகர் எதுவும் இல்லை. விரதங் களுள்ளேயும் கந்தசஷ்டி மகத்தானது .மேன்மை மிக்கது. வேல் முருகனது அருளை நல்கும் அருட்கருவியாக கருதப் படுகிறது.

வேல்ஞானத்தினது அறிவினதும் அடையாளம் நல்லூர் முருகன் வேற்பெருமானின் அருள் இன்றும் நம்புபவர்களுக்கு அபயமளிக்கின்றது.

இத்தகு பெருமைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்றைய தினம் இலட்சோப இலட்சம் மக்கள் மத்தியில் நல்லைக்கந்தன்



ஆறுமுக சுவாமியாக தேரேறி அருள் பொழிந்து வருகின்ற அற்புதமய மான காட்சியை காணலாம்.

எந்தமயமும் கந்தமயமாகவே காட்சியளிக்கின்ற எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் ஈழத்தமிழ் மக்கள் எதிர்பார்த் திருக்கும் சுபீட்சமான தீர்வு அமைதியான சமாதான வாழ்வு என்பவற்றை தந்தருள வேண்டும் என இன் றைய நாளில் பிரார்த்தித்துக்கொள்வோமாக.

மதுரகவி காரை எம்.பி அருளானந்தன்.

## முருகா நீ தேரிலே ஏறு

வேலவன் பெருமையை வாயாரக் கூறு
பாலனவன் பெருமையை கூறியே மாறு
வீரத்தில் அவனொரு வலிமையான ஏறு
தமிழிலே அவன் தேனிலே பிழித்தெடுத்த சாறு
அவன் ஆள்வது இந்த அண்டங்கள் நூறு
அவனை வணங்கினால் அகலுமே போரென்னும் சேறு
சமாதான மழை இந்த மண்ணிலே நிதமும் தூறு
அதற்காக முருகா நீ தேரிலே ஏறு

*சா.ஹரிகரன் -நெல்லியடி மத்திய ம.வித்தி.*

## பணிந்து வேண்டுவோம்

தேரேறி வருகின்றான் எங்கள் முருகன்
தேவாதி தேவரையும் காக்கும் தலைவன்
சீரோங்கும் நல்லை நகர் வீற்றிருப்பவன்
சிந்தையிலே வைத்தடியார் போற்றும்வேலவன்
தீராத வினைகள் போக்கி அருள்பவன்
தித்திக்கும் வாழ்வளித்து காத்து நிற்பவன்
பாரெங்கும் அமைதியெனும் தென்றல் வீசிட
பக்தியுடன் பாதங்கள் பணிந்து வேண்டுவோம்

*மு.முத்துக்குமார்.*

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல பாடப்புத்தகங்களும் அப்பியாசப் புத்தகங்களும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் மலிவான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் நாடவேண்டிய நல்லதோர் நூலகம்

பூபாலசிங்கம் புத்தகசாலை



தென்னிந்திய சஞ்சிகைகள்
வாழ்த்துமடல்கள் காலத்திற்கு ஏற்ப
கலண்டர்கள், டயறிகள்
யாவற்றினதும் உறைவிடமும்
இதுவே
யாழ்ப்பாணம் -கொழும்புப்
புதினப்பத்திரிகைகள் அனைத்தி
னதும் பிரதான முகவர்களும்
இவர்களே!



இல:-04 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 6693

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



கிருஷ்ணா நகை மாளிகை

இல.09,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்

கிருஷ்ணா அடகுக் கடை

இல.370, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



# பெற்ற பயிற்சிகளை தமது வாழ்வியலின் சீவனோபாயத்திற்காகப் பிரயோகிக்க வேண்டும்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரை



"பயிற்சிகளைப்பெற்றவர்கள் அதனைத் தமது வாழ்வியலின் சீவனோபாயத்திற்காகப் பிரயோகிக்கத் தொடர்ந்து முயற்சிக்கவேண்டும்'' இவ்வாறு கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இயேசு சபை அகதிகள் பணியகத்தால் (JRS) கோப்பாயில் உள்ள சங்கமம் நிறுவனத்தில் கடந்த மோத காலமாக நடாத்தப்பட்ட மகளிர் வாழ்வியல் பயிற்சியின் நிறைவு நாள் வைபவம், கண்காட்சி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக்கலந்து சிறப் புரை ஆற்றிய யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் குறிப்பிட்டார்.

தொடர்ந்துஉரையாற்றிய அவர் பாரதியார் புதுமைப் பெண்களுக்கு இருக்க வேண்டிய குணங்களாக நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிமிர்ந்தஞானச் செருக்கு எனப்பல குணங்களைப் பட்டியலிடுகிறார். பாடசாலை யில்முறைசார் கல்வியைப் பெற்ற பின்முறை சாராக் கல்வியாக வாழ்வியல் பயிற்சி நெறியைவழங்குவதற்கு இயேசு சபை அகதிகள் நிறுவனம் உங்களுக்கு உதவியிருக்கிறது.

உலகில்வாழும் பெண்கள் சமூக முதன்மை பெறுவதற்கு இறைநம்பிக்கை, ஆசீர்வாதம், துணிவு முதலிய குணங்களைக் கொண்டிருத்தல் அவசியமானது. இறைஆசீர்வாதம் எத்தகைய தடைகளையும் தகர்த்தெறியவல்லது. பெண்கள் நாட்டின் கண்கள் எனப் போற்றப் படுகின்றனர். இங்கு இடம் பெறும் நிகழ்வுகளுக்கு ''புதுமைப்பெண்கள் நிகழ்வு'' என மகுடம் சூட்டியிருக்கிறீர்கள். இளமைக் காலத்தில் உள்ளத்தில் குடிகொள்ளும் நம்பிக்கையும் ஆளுமைப் பண்பும் உங்களை ஏணிப் படிகளில் உயர வைக்கும். ஏழ்மைச் சூழலில் பிறந்துவிட்டோமோ எனநீங்கள் கவலை கொள்ளக் கூடாது இன்று சமூகத் தில் முன்னிலையில் திகழ்கின்ற பலர் தமது இளமைக் காலத்தில் ஏழ்மையில் வாடியவர்களே. நம் பிக்கையும் விடாமுயற்சியுமே இவர்களின் உயர்வுக்குக் காரணமாயிற்று.

பொருளாதார நிலையில் நலிவுற்ற பெற்றோரைப் பெருமளவாகக் கொண்ட இந்தச் சூழலில் இயங்கும் கோப்பாய் தெற்கு றோ.க.த.கபாடசாலை இன்று எமது கணிப்புக்கு உள்ளாகும் வண்ணம் சிறப்பானபாடசாலையாக வளர்ந்து வருகிறது.

இப்பிரதேச மக்களாகிய நீங்கள் அனைவரும் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடே இவ்வளர்ச்சிக்கு காரணமாகும் எனக் கூறிய அவர் நலிவுற்ற மக்களுக்காக உதவிக்கரம் நீட்டும் இயேசு சபை அகதிகள் பணியக செயற்பாடுகளையும் விதந்த பேசினார்.


கோப்பாய்பங்குத்தந்தை அருட்பணி எப்.எல்.என்.குருஸ் அடிகள் இயேசுச பை அகதிகள் பணியக மாவட்ட இணைப்பாளர் அருட்பணி இயூறின் பெனடிக்ற் உட்படப் பலர் உரையாற்றினர். பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களும் வழங் கப்பட்டன.

நிகழ்வில்அருட்சகோதர சகோதரிகள், பெற்றோர், நலன் விரும்பிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (அ)

---


சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# பண்ணிசைப் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்



திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர் அருள்திரு "நமசிவாய மூர்த்திகள்"மகரத்தலை நாள் (தை அசுவதி) அன்று ( 2008 ஆம் ஆண்டு ) நடைபெற்ற குருபூசை விழாவில் ஆதீன குருமகா சந்நிதானம்

## சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்



அவர்களால் ''தெய்வத் தமிழிசைச் செல்வர்'' கலாபூஷணம் தாவடியூர் **கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்** அவர்களுக்கு "துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல்" என்னும் விருது வழங்கியும் ஆசிக்கவசமான பொன்னாடை போர்த்தியும் பொற்கிழி வழங்கியும் வாழ்த்தியருளப் பெற்றமையை அறிந்து மகிழ்கின்றோம்.

ஆதீன இசைப் புலவர் என்னும் சிறப்பையும் அளித்துள்ள குருமகா சந்நிதானம்

சீர் வளர் சீர் பராமாசார்ய சுவாமிகள் அவர்கள் பொன்னார் திருவடிகளை சிந்தித்து வந்தித்துப் போற்றி வணங்குகின்றோம்.

கனடா

பண்ணிசை மாணவர்
திரு.மு.தம்பையா குடும்பத்தினர்
(ஓய்வுபெற்ற ஆசிரியர் -மட்டுவில்)

(1638)


---


சுழிபுரம் -வடகிழக்கு [சோழிபுரம்] அருள்மிகு சம்புநாகேஸ்வரபதி சுயம்புநாதேஸ்வரி சமேத சுயம்பு நாதலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தண பஞ்சகுண்டபக்ஷ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

31.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கர்மாரம்பம்.
02.09.2008 செவ்வாய்கிழமைபி.பகல்12 மணிமுதல் 03.09.2008 புதன்கிழமை பிற்பகல் 12 மணி வரை பத்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்.
04.09.2008 வியாழக்கிழமை காலை 5.30-6.30 மணிவரை மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு நடைபெறும்.

சர்வபோதகாசிரியர்
'கிரியாகிரமலிஷாரசு'
சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக்குருக்கள்
(பிரமத குருஅரசடிபிள்ளையார் தேவஸ்தானம்நாயன்மார்கட்டு)

பிரதிஷ்டா குருமார் விபரம்
வழக்கம்பரை அம்மன்தேவஸ்தான பிரதமகுரு
'ஆகம கிரியாஜோதி'
சிவஸ்ரீ மு.சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள்
தலைமையில் குருவருள் ஆசியுடன் நடைபெறும்.


சர்வசாதகாசிரியர்
கிரியாசிரோண்மணி
சிவஸ்ரீ.சி. மகேந்திரநாதக் குருக்கள்
(பிரதமகுருமாய்க்கைப்பிள்ளையார் தேவஸ்தானம்)

(1450)

இங்ஙனம் -பரிபாலனசபை.


---

# நல்லூரான் திருவடிக்கு இன்று தேர்த் திருவிழா



## தேரின் வடந்தொட்டு இழுப்போம்

ஆறுதலையில் முடியும் மார்பினில் உருத்திராட்சமணி
ஆறுமுகன் ஏறிவரும் தேர்
சூரனைக் கருவறுத்து தேவர்சிறை மீட்டு நின்ற
காரணர் இவரும் நல்ல தேர்
சக்திகள் எல்லாம் திரண்ட சக்தி கையிலே கொடுத்த
வேலு ன் பவனிவரும் தேர்
பக்தரெல்லாம் கூடி நிற்கும் நல்லையிலே காணும் நல்ல
தேரின் வடம் தொட்டிழுப்போம் நாம்

கவிமணி கந்தமுருகேசதாசனார்

---

## எங்கதைக்கோர் தீர்வு தந்திடவே நீ தேரேறி வந்திடல் வேண்டும்

நல்லை வீதியிலே
நீ தேரேறி வரவேண்டும்
நலங்கள் பல தந்திடவே
நீ தேரேறி வரவேண்டும்
தொல்லைகள் துடைத்திடவே
நீ தேரேறி வரவேண்டும்
தொடர் துன்பம் அறுத்திடவே
நீ தேரேறி வரவேண்டும்
வல்வினைகள் போக்கிடவே
நீ தேரேறி வரவேண்டும்
வாழ்வெலாம் ஒளி யேற்றிடவே
நீ தேரேறி வரவேண்டும்
எல்லையிலா ஈசனே
நீ தேரேறி வரவேண்டும்
எங்கதைக்கோர் தீர்வு தந்திடவே
நீ தேரேறி வரவேண்டும்

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்

---

## திருத்தேரில் வரும் செல்வ

திருத்தேரில் வரும் செல்வ
குமரன் கண்டீர்
சேந்தனெனும் திரு நாமம்
தரித் தான் கண்டீர்
விருப்போடு அர்ச்சிப்பார்
உளத்தான் கண்டீரவன்
வேட்டமுறு நல்லூரில்
விளைந்தான் கண்டீர்

ந.பரந்தாமன், கொக்குவில்

---

## பேறுபல ஈந்தருளும் நல்லைவாசா

சீர்கொண்ட திருநல்லை அருட்சோதி உருவாகி
சிறப்பொடு மெமதின முயரவே
செங்கதிர்சே ரிலங்குமொளி யறுதிங்கள் வதனங்கள்
ஈசா னம்முத லாறும்
போர்கொண்ட முகமாகப் பிறங்குமெழிற் பெருமானே
பக்தர்க் கருளு பதியே
பழந்தமிழ்நற் புலவோர்கள் தமிழெனவே நினையுந்தான்
பற்றொடு புகழ்ந்து போற்றப்
பார்கொண்ட பல்லுலகும் பணித்தேத்துஞ் செம்மொழியாய்ப்
படிமிசைத் தமிழை வைத்தாய்
பேறுபல ஈந்தருளும் பரம்பொருளே நல்லைவாசா
பரம குருசா மிஐயா
கார்கொண்ட கொடியவிருட் சமருந்தான் குருதிமழை
கொட்டியா றாகப் பெருகுதே
கணப்பொழுதிலதை விரட்டி யெமைக்காக்க ரதமேறி
இவர்ந்தருள் புரிவாய் கோவே.

நா.புவனசுந்தரம், வட்டுக்கோட்டை


---

## உற்றதுன்பம் போக்கிடத் தேரேறி வா

தேரேறி வா முருகா தேரேறி வா
தெய் வானைவள்ளி உடனே தேரேறி வா
ஊரார் நலன்பெற்று வாழத் தேரேறி வா
உற்ற துன்பம் போக்கிட தேரேறி வா
சீரான வாழ்வு தந்திடத் தேரேறி வா
தேசம் அமைதி பெற்றிடத் தேரேறி வா
நாரா யணனின் மருகா தேரேறி வா
நாளும் எம்மைக் காக்கத் தேரேறி வா

சிந்துபுரக்கவிராயர்)

# நோத்முதல் கோபல்லவா வரை (82)



### நடுவகுப்பார் செய்த கிளர்ச்சி

லோறன்ஸ் அவர்கள் மாத்தறையில் நில்கங்கையெனப்படும் நீல ஆற்றங் கரையில் அமைக்கப்பட்டிருந்த "றோஸ் குடிசை" என்னும் இல்லத்தில் 1829 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் எட்டாம் நாளில் பிறந்தார். அவருடைய தந்தையார் யோண் லோறன்ஸ் என்பார். ஐரோப்பியருள் யுத்தப் பிரியரான பிறசிய இனத்தைச் சேர்ந்தவர். லோறன்ஸ் பிறந்த காலத்தில் யோண் லோறன்ஸ் மாத்தறையில் பொலிஸ் நீதிபதியாகக் கடமையாற்றினார். அவருடைய பதின்மூன்று பிள்ளைகளுள் கடைசிப் பிள்ளையே லோறன்ஸ்.



சேர்.முத்துக்குமாரசுவாமி அவர்கள்

லோறன்ஸ் இளமையிலேயே சிறந்த விவேகியாயிருந்தமையால் அவரை உயர்தரக் கல்வி பயில வைப்பதற்குத் தந்தையார் விரும்பினார்.

ஆங்கில இலக்கண இலக்கியங்கள், லத்தீன் மொழி, கணிதம் என்பவற்றோடு சங்கீதம், நடனம், சித்திரம், கவிகள் என்பனவும் தம் மைந்தன் பயில வேண்டும் எனத் தந்தையார் விரும்பினார். எனவே கொழும்பிலுள்ள றோயல் கல்லூரிக்குத் தம் மைந்தனை அனுப்பினார்.

### மீள் பார்வை

றோயல் கல்லூரியிலே கல்விகற்ற லோறன்ஸ் ''நான் ஒரு பெரிய மனிதனாய் வருகிறதாக உணருகிறேன்'' என்று எழுதியுள்ளார்.

உண்மையில் அவர் நீதித்துறை, எழுத்துத்துறை, இலக்கியத்துறை, சட்டத் துறை, கல்வித்துறை என்பனவாகிய பல துறைகளிலும் அற்புத மான முன்னேற்றத்தைச் செய்துள்ளார்.

றோயல் கல்லூரியைப் பார்வையிடச் சென்ற குடியேற்றக் காரியதரிசி லோறன்சின் வியாசக் கொப்பியைப் படித்துப் பார்த்து அப்பிள்ளையை நேரில் பார்க்க விரும்பினார். அவர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதும் அவரை மெச்சி ''தம்பி, உனக்கு அரசாங்கத்தில் உடனடியாக ஓர் உத்தியோகம் தர விரும்புகிறேன்'' என்றாராம்.

லோறன்ஸ் விவேகியாதலால், "பொருள் தேவையான போது உத்தியோகத்திற்கு வருகிறேன்'' என்று கிண்டலாகக் கூறினாராம். இளமையிலேயே குடியேற்றக் காரியதரிசியை நெற்றிக்கு நேரில் கிண்டல் செய்த லோறன்ஸ் பெரியவரானபின் ஆள்பதிகளோடு சொற்போர் தொடுத்ததில் வியப்பில்லையே. லோறன்ஸ் தாம் இலங்கையர் என்பதில் பெருமை கொண்டே தொண்டு செய்தார். அவரைப் போன்ற தேசத் தொண்டர்களைக் காண்பது அரிது.

### சேர்.முத்துக்குமாரசுவாமி அவர்கள்

*பேர்மைக்கும் ஒப்பில்லாத*
*பெருங்குணக் கொடைக்கும் தாழா*
*நேர்மைக்குந் தலைமை சான்ற*
*நிலைமைக்கும் பிறப்பின் மேன்மைச்*
*சீர்மைக்கும் மாசிலாத*
*சிறப்புக்கும் தன்னே ரில்லாச்*
*சேர் முத்துக்குமார சாமிச்*
*செம்மல் சீர் சிறக்கமாதோ.*

-ந.கி.பாரதி.

சேர் முத்துக்குமாரசுவாமியவர்களை என்ன தன்மையர் என்றோ என்னவாய் இருந்தவர் என்றோ எடுத்தியம்ப இயலாது. அவர் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் பெரும் புகழோடு வாழ்ந்தவர்.


அவரை அறிஞர், நூலாசிரியர், அரசியற் பண்டிதர், தேசபக்தர் என்றெல்லாம் நூல்கள் அன்று தொட்டு இன்று வரை புகழுகின் றன. அவரும் புகழோடு தோன்றிய பெரியாராவார்.

கோல்புறூக் அரச யாப்புத் திருத்தத்தின் வண்ணம் இலங்கையில் முதன் முதலாக நிறுவப்பட்ட சட்ட சபையிலே தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்குமாறு நியமிக்கப்பெற்ற பெரியார் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசாமி என்னும் முதலியாராவர். அவர் நாற்பது ஆண்டுகளாய் ஆள்பதி அவர்களின் அரண்மனையில் மொழி பெயர்ப்பு முதலியாராய் உத்தியோகம் வகித்துப் புகழ்பெற்றவர். குமாரசுவாமி முதலியாருக் குப் பின்னர் அவருடைய சகோதரியாரின் மைந்தர் சேனாதிராயர் எதிர்மன்னசிங்கம் என்பார் முதலியாராயிருந்தவர்.

குமார சுவாமி அவர்கள் இறந்த பின் அவருடைய இடத்தில் எதிர்மன்ன சிங்கம் அவர்களே சட்டசபை அங்கத்த வராயும் இருந்தார்.

### க.சி.குலரத்தினம்

எதிர்மன்னசிங்க முதலியார் இறந்த பின் சட்டசபையின் பிரதிநிதியாக முன்சொன்ன குமாரசுவாமி முதலியாரின் மைந்தர் முத்துக் குமாரசுவாமி அவர்களே இருத்தல் வேண்டும் என்று தமிழர் விரும்பினர். எனவே தமிழ்ச் சபைகள் தங்கள் விருப்பத்தை ஆள்பதி சேர்.சாள்ஸ் மக்காதி அவர்களுக்கு விண்ணப்பித்தார்கள். (தொடரும்)





நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் நிலையத் தலைவர் ந.ஜெயகிருஷ்ணா உரையாற்றுவதையும், விருந்தினர்களான ச.க.முருகையா, க.தர்மலிங்கம், செ.செல்வநாயகம், சி.தர்மரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மற்றும் சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.
(படம்-நீர்வேலிச் செய்தியாளர்)

# இருபதாம் நூற்றாண்டு (5)

# ஈழத்தமிழ் இலக்கியம்



1950 ஆண்டில் நவீன கவிதை வீறுடன் எழுச்சி பெறுகின்றது. இக் காலகட்டத்துக் கவிஞர்களில் முருகையனும் நீலாவணனும் குறிப்பிடத்தக்கவர்கள். பல கவிதைகளையும் பா நாடகங்களையும் காவியங்களையும் எழுதிய முருகையன் கவிதைகளில் சிந்தனையின் கனதியே நிறைந்திருந்தது. இவரது காவியமும் கவிதைகளும் அடங்கிய தொகுப்பு ''நெடும் பகல்'' என்பதாகும். "வந்து சேர்ந்தன", "கோபுர வாசல்", "ஆதி பகவன்", "கடூழியம்'' என்பனவும் சிறந்த கவிதைகளைக் கொண்டுள்ளன. ''கவியரங்கு'' என்ற கள நிகழ்வுகளில் கவிதைகளை மக்களுக்கு நேரில் எடுத்துக்கூறி கவிதை படிக்கும் ஆர்வத்தைத் தூண்டியவர்களில் முருகையனும் ஒருவர். நாவற்குழியூர் நடராசன், சில்லையூர் செல்வராசன் போன்றோர் வானொலியிலே கவிதைகளை அரங்கேற்றிச் சிறப்புப் பெற்றனர்.

நீலாவணன் நிறையக் கவிதைகளையும் சில பா நாடகங்களையும் எழுதியுள்ளார். காதல் கவிதைகளையும் கிழக்கிலங்கைக் கிராமிய வாழ்வின் வேறு பட்ட தன்மையைச் சித்தரிக்கும் பல கவிதை களையும் எழுதியுள்ளார். பிற்காலத்தில் இவரது கவிதைகளில் ஆன்மீக உணர்வு வெளிப்பாடும் புலப்படுத்தப்பட்டுள்ளது. 'வழி' என்னும் தொகுப்பில் இவரது சிறந்த கவிதை கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1960 களில் கவிதைப் போக்கில் ஒரு எழுச்சி ஏற்பட்டது. 1958 இல் நடைபெற்ற இனக்கலவரம் இப் போக்கிற்கு ஒரு வகையில் காரணமாக அமைந்ததெனலாம். கவிஞர் காசி ஆனந்தன் கவிதைகள் இப் போக்கினை இனங்காட்டுகின்றன. "உயிர் தமிழுக்கு", ''தமிழன் கனவு'', "தெருப்புலவர்'', ''சுவர்க்கவிகள்'' போன்ற கவிதைத் தொகுப்புக்கள் இதற்குச் சான்றாக உள்ளன.

இக் காலகட்டத்தில் சுபத்திரன், புதுவை இரத்தினதுரை, பசுபதி போன்றோர் அரசியற் சூழ்நிலைகளைக் கவிதைகளில் பொறித்தனர். எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், மௌன குரு, ஈழவாணன், இ. சிவானந்தன் போன்றோரும் முற்போக்குச் சிந்தனையுடன் கவிதைகளை எழுதினர்.

சீர்திருத்தப் போக்கும் ஆன்மீக நோக்குமுடைய கவிஞர் பலரும் இக்காலத்தில் உள்ளனர். அவர்க ளில் வி. கந்தவனம், காரை சுந்தரம்பிள்ளை, அன்பு முகையதீன், ஏ.இக்பால், சா.வே. பஞ்சாட்சரம், பா.சத்தியசீலன், வெ.குமாரசாமி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

இக் காலக் கவிதைகளில் ஈழத்துத் தமிழ்க் கவிதை வடிவநிலையிலும் ஓசை நிலையிலும் சில மாற்றங்களைப் பெற்றிருந்தது. ஓசைநயம் மிக்க பல்வேறு யாப்பு வடிவங்களிலும் சந்தவிதற்பங்களிலும் கவிஞர்கள் அக்கறை செலுத்தினர். பேச்சுவழக்கு, சிறு வாக்கிய அமைப்பு என்பன கையாளப்பட்டன. பொருள் அமைப்புக்கு ஏற்றவாறு சீர்கள் பிரித்து அடிகள் அமைக்கப்பட்டன. ஓசை நிறுத்தம் வேண்டின் நிறுத்தக் குறிகளும் இடைவெளிகளும் பயன்படுத்தப்பட்டன. இப் பண்பு தமிழகக் கவிதைகளில் காணப்படாத ஒன்றாகும். வெண்பா, கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா போன்ற மரபான வரையறைக்குட்பட்ட வடிவங்களிலும் பேச்சோசைப் பண்பைப் புகுத்திய தனித்துவம் ஈழத்துக் கவிஞர்களான மகா கவி, முருகையன், நீலாவணன், எம்.ஏ. நுஃமான் போன்றோருக்குரியது.

### புதுக் கவிதை

1970க்குப் பின்னர் புதுக்கவிதை அல்லது வசனகவிதை என்றதொரு வடிவம் தோன்றியது. தருமு சிவராமு, மு.பொன்னம்பலம், கே.எஸ்.சிவகுமாரன் போன்றோர் இக் கவிதைகளை எழுதினர். சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இதற்குப் பிரசுரவாய்ப்பைக் கொடுத்தன. முற்போக்கான கருத்துக்கள் புதுக் கவிதைகளில் வெளியிடப்பட்டன. வ.ஐ.ச.ஜெயபாலன், சிவசேகரம் போன்றோர் இப் புதுக் கவிதையைக் கலைநுட்பத்துடன் கையாண்டுள்ளனர்.

ஈழத்தில் கவிதை, நவீன கவிதை, புதுக் கவிதை என மறுமலர்ச்சி பெற்ற காலங்களில் பழைய மரபான கவிதைகளையும் சிலர் எழுதியுள்ளனர். புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளையின் ''பகவத்கீதை வெண்பா'' இதிற்குறிப்பிடத்தக்கது.

க.கணபதிப் பிள்ளையின் ''துவுதூஉம் மலரே'' "காதலி யாற்றுப்படை" போன்றவையும் வித்துவான் வேந்தனாரின் ''கவிதைப் பூம்பொழில்'' பண்டிதர் வீரகத்தியின் ''செழுங்கமலச் சிலம்பொலி'' போன்ற நூல்களும் பழைய மரபையும் புதிய போக்கையும் இணைத்து நிற்பதைக் காணலாம்.

குழந்தைக் கவிதைகளும் பல எழுந்துள்ளன. அம்பி, சத்தியசீலன் போன்றோர் இத்துறையில் பங்களிப்புச் செய்துள்ளனர். கவிதையின் வளர்ச்சிப் போக்கில் கவிதைக்காக மட்டும் எனச் சில சஞ்சிகைகளும் தோற்றம் பெற்றன. ''தேன்மொழி'', ''நோக்கு'', "அக்னி'' என்பன குறிப்பிடத்தக்கன.

### அண்மைக்காலக் கவிதை

1980க்குப் பின்னர் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் அரசியல், பெண்ணியம், சாதியம் போன்றவை முனைப்புப் பெறுகின்றன.

பெண்கள் கவிதை எழுதும் வளர்ச்சி நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. போர்ச்சூழலில் வாழ்வியல் நடைபெறுவதால் அதன் முன்புலத்தையும் பின்புலத்தையும் கவிதைகளில் வெளிப்படுத்தும் புதிய மரபு ஒன்றும் தோன்றியது.

இத்துடன் புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களுக்கும் சென்றுள்ள தமிழர் தமதுணர்வுகளைக் கவிதைகளிலே கூறும் மரபும் உருவாகியுள்ளது.

### -கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஓர் அங்கமாகப் ''புலம்பெயர் இலக்கியம்'' என்ற புதியதொரு இலக்கிய வகைப் பாடும் தோன்றியுள்ளது. பிரயாண அவலம், இருப்பிடச்சிக்கல், விசாச்சிக்கல், நிற வெறி, புதிய பண்பாட்டுச் சூழல், தாயகம் பற்றிய ஏக்கம் என்பன இக் கவிதைகளில் வெளிக் கொணரப்படுகின்றன.

போராட்டக் களமும், புலம் பெயர்சூழலும் பெண்களுக்கான மரபுத் தளைகளை உடைத்தெறிய வேண்டும் என்ற எண்ணம் வலுப்படும் நிலையில் பல பெண் கவிஞர்களும் உருவாகியுள்ளனர். (தொடரும்)



## தேருலா வரும் குமரன் அருள் எங்கும் பரவட்டும்

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்.
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோகிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்.

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)



கிளை இல 91 கே.கே.எஸ். வீதி

# எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல 80 கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.



T.P: 222 2486

---

தேர் உலா வரும் நல்லைக்குமரன் அருள் என்றும் நிலைக்க

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்து, பால்மா வகைகள் என்பவற்றை மலிவாக நியாய விலையில் பெற்றுக்கொள்ள



## R.V.G மெடிக்கல்ஸ்

### ஆர்.வி. ஜி ஸ்தாபனம்

இல.58 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.



இல 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (O.P.D முன்பாக)



T.P: 021 222 2129

---

எல்லாம் வல்ல நல்லூர் முருகனின் அருள் கிடைக்கட்டும்

தங்க நகைகளை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள

## அசோகா நகை அகம்



ASOKA JEWELLERS



இல:-111 . கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 222 6290

---

அனைவருக்கும் நல்லூர் முருகனின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

புத்தம் புதிய மோட்டார் சைக்கிளா? அவற்றிற்கான உதிரிப்பாகங்களா? மோட்டார் வாகனங்களா? பற்றரி வகைகளா? அனைத்தையும் ஓரிடத்தில் நிதான விலையில் பெற்றிட

## அருள் விநாயகர்

இல 108 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மெயின் வீதி சங்கானை

அருள் விநாயகர் ரேடர்ஸ்

இல 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மோட்டோர்ஸ்



---

அவனியிலே சமாதானம் நிலைத்திட அருள் வேண்டி நிற்கின்றோம்



தரம் குன்றா நகைகளை மலிவு விலையில் பெற்றிட

## சிறி நிதியா நகை மாளிகை

இல:-1 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:- சிறி ரூபா

## சானுயா நகை மாளிகை



இல:-56 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

தேர் உலா வரும் நல்லைக்குமரன் அருள் என்றும் நிலைக்க

சர்வதேச தரமுடன் ஆடைகள் தரமிடும்



## சீமாட்டி புடவைக்கடல்



கிளைகள்: மங்கை சில்க்ஸ்

மொடோன் மாக்கற் இல.122மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இல.15,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 222 2196 , பக்ஸ்:-222 2102

---

நல்லூர் கந்தனே நின்னருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

மோட்டார் சைக்கிள்களையும் உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்



## கரனி மோட்டோர்ஸ் அன் காட்வெயர்

தொ.பே: 222 2850, பக்ஸ்:-222 2850

HARANI MOTORS &HARDWARES

164 ஸ்ரான்லி வீதி , யாழ்ப்பாணம்

---



## நியூ அபிராமி புடவையகம்



புத்தம் புதிய நவீன ரக சகல விதமான ஆடைத்தெரிவுகளை மலிவான விலையில் பெற நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

155,156, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

---

உனை நாடி வருபவர்களுக்கு நல்லருள் காட்டி விடு கந்தா

## கு. சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்



நாளுக்கு நாள் மாறும் நாகரீகத்திற்கேற்ற டிசைன்களில் ஆடைகளைத் தெரிவுசெய்வதற்கு ஏற்ற இடம்.

நவீன சந்தை வெளிப்புறம், பெரியகடை யாழ்ப்பாணம்.

தேரில் ஆரோகணிக்கும் நல்லூர்
முருகனின் அருள் வேண்டி நிற்கின்றோம்

# வெங்கடேஸ்வரா



உலக பிரசித்தி பெற்ற இங்கிலாந்து தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட 12 வருட உத்திரவாதம் கொண்ட Raleigh சைக்கிள் யாழ். ஏக விநியோகஸ்தர்கள் ஆண்,பெண் இருபாலருக்குமான துவிச்சக்கர வண்டிகள் உண்டு அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்

இல:125A, 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆறுமுகம் கொண்டவனே உன்
அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

# ஈஸ்வரன் ரேடர்ஸ்



சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் கண்ணைக் கவரும் சிறுவர்களுக்கான சைக்கிள்கள் அனைத்தையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்.

தொ.பே. 021 222 2813

இல: 69 ,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்று தேரேறி உலா வரும் நல்லூரான் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகிறோம்

பலசரக்குப்பொருட்களை நியாய விலையில் பெற
நாடவேண்டிய ஸ்தாபனம்




# க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்

பல்பொருள் வாணிபம்

இல :318 , ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் நல்லூரான் அருள் வேண்டி
நிற்கின்றோம்.

சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள




# ரூபா பன்முக வர்த்தகம்


இல:104 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

தொ.பே. 021 222 2479

தேரேறும் முருகா உன் அருள் தா மருகா

# சிற்றி எலக்ரோனிக்ஸ்







இல:47,49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 2917

**தேரேறி வரும் நல்லூர்க் கந்தன் பாரினிலுள்ள அனைவரினதும் துயர் துடைத்து அருள் புரிவானாக!**



| | | | |
|---|---|---|---|
| 1.8 Dual core Celeron<br>ASUS Motherboard<br>80GB HDD<br>512MB Memory<br>Combo Drive SONY<br>ATX Casing<br>15" CRT Viewsonic<br>Keyboard<br>Mouse<br>~~43400/-~~<br>10%கழிவு 39000/- | 1.8 Dual core Celeron<br>ASUS Motherboard<br>160GB HDD<br>1GB Memory<br>DVD Writer SONY<br>ATX Casing<br>15" CRT Viewsonic<br>Keyboard<br>Mouse<br>Speaker<br>~~47250/-~~<br>10%கழிவு 42500/- | 2.0 Dual core<br>ASUS Motherboard<br>160GB HDD<br>1GB Memory<br>DVD Writer SONY<br>ATX Casing<br>15" CRT Viewsonic<br>Keyboard<br>Mouse<br>Speaker<br>~~51200/-~~<br>10%கழிவு 46000/- | 2.0 Dual core Intel<br>Intel Motherboard<br>160GB HDD<br>1GB Memory<br>DVD Writer SONY<br>ATX Casing<br>17"LCD Viewsonic/DELL<br>Keyboard<br>Mouse<br>Speaker-MORRO 200<br>~~68500/-~~<br>10%கழிவு 61500/- |

All are With WARRANTY

Flash Drives
1GB:- 800/-
2GB:- 1200/-
4GB:- 2200/-
8GB:- 4500/-

Woofers
2.1:- 4000/-
5.1:- 8000/-

MODEMS, VGA Cards, SOUND Cards, T.V Cards & Accessories are Available

அரச ஊழியர்களுக்கு கணனி பெற வங்கிக்கடன் வசதி செய்து கொடுக்கப்படும்

**PC SOLUTIONS**
Our Strength is Your Satisfaction
527/1, Navalar Road, jaffna

கணனி சம்மந்தமான அனைத்து சேவைகளும் தரமாகவும் மிகக் குறைந்த கட்டணத்துடனும் மேற்கொள்ளப்படுகின்றன.
Computer Sales & Maintenance Centre

---

**நல்லூர் கந்தனே நலிவுற்றிருக்கும் எமக்கருள் தருவாயே**

# JAFFNA ELECTRICALS



## Authorised Dealers for

141, Power House Road,
Jaffna

## Abans

BRANCH -94 (6)
Stanley Road- Jaffna.

---

இன்று தேரேறி வரும் நல்லூர் முருகனின் அருள்
அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.

PCP

## PC PARK (PVT) LTD.

the path to computer paradigm

633, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.
021 222 9581
தொலைநகல் இல.
021 222 9581



---

இன்று தேரேறி வரும் நல்லூர் முருகனின் ஆசி அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.



# ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்

பல சரக்குப் பொருட்களின் மொத்த சில்லறை
வியாபார நிலையம்

இல:342, 344, 346, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---



முருகனே! முத்துக்குமரனே!
வள்ளிதெய்வயானையுடன்
தேரேறி வந்தே விளையாடிட வா! வா! வா!

உலகின் எந்தப்பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் உள்ளூர்,வெளியூர் தொலைத்தொடர்பு வசதிகள்,லெமனேற்றிங்,பிறின்ரிங்,கிறபிக்ஸ், டிசைனிங், கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

விரைவான பணப் பரிமாற்றத்திற்கு

WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

Money Master

சகல விதமான
SLT MAXtalk
SLT NetCard

Internet Browsing

யாழ்:குடாநாட்டிலிருந்து உலகின் எப்பாகத்திற்கும் கடிதங்கள் மற்றும் பொதிகளை மிக விரைவாக அனுப்பிட

FedEx Express
நம்பகரமான துரிதசேவை

கணனி சம்பந்தமான சகல பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

Warranty 1 & 3 Years With Servise

# திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

---

நல்லூர் முருகனின் அருள்
அனைவருக்கும் கிடைக்கட்டும்

# உஷா ஏஜென்சி

62/32 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.




## தேரேறி நீ வரவேண்டும்

தேரேறி நீ வர வேண்டும் நல்லூர்த்
தேரடி மண்ணில் நாம் தவழ வேண்டும்.
வண்ண மயில் மீதேறி நீவர வேண்டும்
வன்னியூர் மீட்டு நீதர வேண்டும்
வடிவேலோடு நீ வர வேண்டும்
வல்லவினை அகற்றிட வரம் தர வேண்டும்
வள்ளி தெய்வானையுடன் நீ வர வேண்டும்
வளம் கொழிக்கும் நாடாக செழித்திட வேண்டும்.

*சுப்பிரமணியம் வள்ளியம்மை–சாவகச்சேரி.*

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## இந்தியக் கடற்படையிடம் சரணடைந்த இலங்கையர்கள்

(இராமேஸ்வரம்)

இலங்கையிலிருந்து படகில் வந்த இலங்கையர்கள் நான்குபேர் இந்திய கடற் படையினரிடம் சரணடைந்தனர்.

கிளிநொச்சியை சேர்ந்தவர்களான ஜெயரூபன்(26), சிவரூபன் (17), ஞானகுமார் (20), ஜெயகுமார் (30) ஆகியோர் நேற்று முன்தினம் அதிகாலையில் மண்பிட்டி கடற்கரையிலிருந்து படகில் புறப்பட்டு பகல் 10 மணிக்கு இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதிக்கு சென்றனர்.

ரோந்து பணியிலிருந்த இந்திய கடற்படையினர் சரணடைந்த இவர்களை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

கடற்படை மற்றும் புலனாய்வு துறையினரின் விசாரணைக்குப் பின் இராமேஸ்வரம் பொலிஸாரிடம் ஒப்படைத்த கடற்படையினர் படகை பறிமுதல் செய்தனர். (ச-5)

## புலிகளின்...

கிழக்கு தலைமையகம் மற்றும் கடற்படை பயிற்சித்தலைமையகம் அடங்கிய பெரும் தளம் மீது விடுதலைப் புலிகளின் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின.

இதில் ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 35 பேர் காயமடைந்துள்ளனர்.

கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கடற்படையின் தாக்குதல் படகுகள் இரண்டும் அழிக்கப்பட்டுள்ளன.

கடற்படைத் தலைமையக கட்டுமானங்களும் சேதமாகியுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழிக்கப்பட்ட படகுகள் என்ன ரகத்தைச் சேர்ந்தவை என்ற தகவல் ஊடகத்தில் வெளியிடப்படவில்லை. (ச-5)

## நெடுங்கேணி...

பகுதியில் உள்ள ஒலுமடுவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் பொதுமக்களை இலக்கு வைத்து கிளைமோர்த் தாக்குதல் நடத்தினர் என வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் மரக்கறி வியாபாரியான சந்திரன் (வயது 35) மற்றும் சுகிர்தன் (வயது 15) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். (ச-5)

## திருமலைத் துறை...

இத்தாக்குதலில் கடற்படையினருக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

கடற்படை தலைமையகத்தில் இருந்த படைய தங்ககங்கள் வான் புலிகளின் துல்லியமான குண்டுவீச்சுக்கு இலக்காகின.

இதில் 4க்கும் அதிகமான கடற்படையினர் கொல்லப்பட்டனர். 35க்கும் அதிகமான கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

அத்துடன் படையத்தளப் பகுதியும் பாரிய அழிவுக்கு உள்ளானது.

தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய வான்புலிகளின் விமானங்கள் பாதுகாப்பாக தளம் திரும்பின என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# வன்னியிலிருந்து வவுனியாவுக்குச் சென்றால் மக்கள் புலி முத்திரை குத்தப்படுவார்கள்

## சம்பந்தன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னியில் தொடரும் மோதல்களால் ஏற்கனவே இரண்டு இலட்சத்துக்கும் மேலதிகமானவர்கள் இடம்பெயர்ந்திருப்பதுடன் மேலும் மூவாயிரம் குடும்பங்கள் இடம்பெயர விருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர அஞ்சுவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தால் தாம் விடுதலைப் புலிகள் முத்திரை குத்தப்படலாம் என அவர்கள் அஞ்சுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

இவ்வாறு அச்சமடைந்திருக்கும் மக்கள் வெளியேற முடியாதிருப்பதால் அவர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளதென அவர் தெரிவித்தார்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தமக்குப் பாதுகாப்பானவை இல்லை என்பது பற்றி வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தெரியும் என்பதால் அச்சமின்றி அவர்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவார்கள் என நான் நினைக்கவில்லை.

அவ்வாறு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றால் விடுதலைப் புலிகள் என முத்திரை குத்தப்படுவோம் என அவர்களுக்குத் தெரியும் என்றார் சம்பந்தன்.

### மறுத்துரைத்த அரசாங்கம்

ஆயினும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனின் குற்றச்சாட்டை மறுத்துரைத்த தேசிய பாதுகாப்பு பேச்சாளர்அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து பலர் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறினார்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் தடை ஏற்படுத்தியிருப்பதாக குற்றம் சாட்டிய அமைச்சர், மோதல்களில் விடுதலைப் புலிகள் தோல்வியைச் சந்தித்திருப்பதால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பொதுமக்களை பயன்படுத்தப் பார்க்கின்றனர் என்றார். (ச-5)

## கல்வி நிர்வாக சேவை Iக்கு யாழிலிருந்து 10 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு I இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பத்துப்பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு,

என்.வரதராசா (யாழ்.வலயக் கல்வி அலுவலகம்), எஸ்.உதயகுமார் (வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்), வி.செல்வராசா (வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்), ஜி.விக்னேஸ்வரன் (தீவக வலயக் கல்வி அலுவலகம்), எஸ்.மகாலிங்கம் (யாழ்.வலயக் கல்வி அலுவலகம்), வி.வேலுப்பிள்ளை (செம்மணி வீதி, நல்லூர்), எஸ்.செல்வராஜா (அல்வாய் மேற்கு), கே.பொன்னம்பலம் (காசிப்பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பழை), எம்.பரம்சோதி (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) எஸ்.சுப்பிரமணியம் (பருத்தித்துறை வீதி, நல்லூர்), எஸ்.ரட்ணராஜா (கொக்குவில் மேற்கு). (ச-5)

## சாள்ஸ்-டயானா திருமண கேக் துண்டு 1200 பவுனுக்கு விற்பனை

(கொழும்பு)

மறைந்த பிரித்தானிய இளவரசி டயானாவினதும் இளவரசர் சாள்ஸினதும் திருமணத்திற்காக தயாரிக்கப்பட்ட கேக்கின் துண்டொன்று, கிளோ செஸ்டர்ஷியரிலுள்ள ஏல விற்பனை நிலையத்தில் 1200 ஸ்ரேலிங் பவுனுக்கு விற்பனையாகியுள்ளது.

மேற்படி 9 சதுர அங்குல அளவான இந்த கேக் துண்டானது 1981ஆம் ஆண்டு அரச குடும்பத்து சமையல்காரர் ஒருவரால் கிளரன்ஸ் மாளிகையில் சுத்திகரிப்பாளராக பணியாற்றிய திருமதி மொய்ரா ஸ்மித் என்பவருக்கு கையளிக்கப்பட்டது.

மேற்படி கேக்குடன் இளவரசர் சாள்ஸ் மற்றும் இளவரசி டயானாவின் நன்றிக் கடிதமொன்றும் மொய்ரா ஸ்மித்திற்கு இதன் போது வழங்கப்பட்டது.

சாள்ஸ் டயானா திருமணத்தின் போது உத்தியோகபூர்வமாக 23 திருமண கேக்குகள் தயாரிக்கப்பட்டதாகவும், அவற்றில் ஒன்றே கிளரன்ஸ் மாளிகைக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ச)

## வன்னியில் பாதுகாப்பு...

இலங்கை அரசாங்கமும் தமிழீழ் விடுதலைப் புலிகளும் இதற்கான அழைப்பை விடுப்பதுடன் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமென ஆயர் கோரிக்கை விடுத்துள்ளதாக பி.பி.சி செய்திச் சேவை தெரிவித்திருக்கின்றது.

வன்னிப் பிரதேசத்தில் இடம் பெறும் யுத்தம் காரணமாக பொதுமக்கள் பேராபத்தை எதிர்நோக்கியுள்ளனர். கோரமான ஆயுத மோதலுக்கு மத்தியில் சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் சிக்கியுள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் தற்காலிக பாதுகாப்பை நாடியே சென்றுள்ளனர் என ஆயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மக்கள் சுதந்திரமாக இயங்க முடியாததால் அவர்கள் பெரும் துயரத்தில் சிக்கியுள்ளதாக ஆயர் குறிப்பிட்டுள்ளார்.

இடம் பெயர்ந்த மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பாக திக்கு தெரியாமல் திண்டாடுவதாகவும் அவர்களது நிலைமை மேலும் கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-3)

## வன்னியில் இடம்பெயரும்...

வன்னியிலிருந்து இடம்பெயரும் மக்கள் எவ்வாறு வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவது என்பதற்கான திட்டங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கோத்தபாய ராஜபக்ஷ கூறினார்.

வன்னியில் இடம்பெறும் மோதல்கள் எப்பொழுது முடிவுக்கு கொண்டுவரப்படும் என்பது தொடர்பான கால எல்லை எதனையும் குறிப்பிட்டுக் கூற முடியாது. அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் திட்டமிட்டபடியே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லாத முறையிலேயே வன்னியில் இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மக்களுக்கு பாதிப்பின்றி எவ்வாறு கிழக்கை மீட்டெடுத்தோமோ அதேபோல வன்னியையும் மீட்டெடுப்போம். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இணையத்தளங்களில் கூட மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளமை பற்றி எந்தத் தகவல்களும் இல்லை என்றார் அவர்.

அங்கு முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளை பகிரங்கமாக விரிவாக கூற முடியாது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு யுத்த மூலம் தீர்வு இல்லை என்பதில் உறுதியாக இருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியல் ரீதியான தீர்வொன்றை முன்வைக்கத் தயாராகவுமுள்ளார்.

எனினும் நாங்கள் பாதுகாப்பு தரப்பினர் என்பதால் அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியிலேயே தற்பொழுது ஈடுபட்டுள்ளோம். உரிய களநிலை ஏற்பட்டதும் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடி வரும் இராணுவத்தினரின் மன வலிமையை குறைப்பதற்கே திருகோணமலை கடற்படைத்துறைமுகம் மீதான தாக்குதல் அமைந்துள்ளது.

எனினும் இந்தத் தாக்குதல் மூலம் படையினரின் மன வலிமை குன்றிவிடவில்லை. அரசாங்கப் படைகள் தொடர்ந்தும் பலமாகவே இருக்கின்றனர்.

நன்கு பயிற்றப்பட்ட இராணுவத்தினர் இருப்பதனால் வன்னியில்இராணுவ நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுவதாக அவர் கூறினார்.

அதேநேரம் வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கான உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் சீராக அனுப்பப்பட்டு வருவதாகவும் போதிய அளவு பொருள் இருப்பு அங்கு காணப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் கோத்தபாய ராஜபக்ஷவுடன் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திவாரட்ண ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ச-5)

NEW MICRO
COMPUTER SYSTEMS
COMPUTER EDUCATION
After O/L & A/L Take The Next Right Stap..!
பரீட்சை முடிந்து விட்டதா? அடுத்து என்ன செய்வது என குழப்பமா?
குழப்பம் வேண்டாம். எமது நிறுவனத்துடன் இணைந்து கொள்ளுங்கள்.
புதிய பிரிவு ஆரம்பம்.
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
30-08-2008
03-09-2008
(பகல் 10.00 மணி)
Computer Courses:
@ Dip in Micro soft office
@ Dip in Disk top Publishing
@ Dip in Computer Software Engineering
@ Dip in Computer Hardware Engineering
@ Dip in Video Editing
@ Dip in Computer Accounting
@ Dip in Internet & E-mail
SPECIAL OFFER ALLCOURSE
NEW MICRO COMPUTER SYSTEMS
MAIN STREET, CHANKANAI.
T.P:021-4590042,0602210727
E-MAIL:NMCSCOMPUTER@YAHOO.COM

தேன்தமிழ் சனசமூக நிலையம்
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு
1 ஆம் பரிசு இல:- 378
2 ஆம் பரிசு இல:- 1961
3 ஆம் பரிசு இல:- 2025
ஆறுதல் பரிசுகள்:-
744, 4298, 3866, 2053, 2116, 3857, 3862.
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
-நிர்வாகம்
(1640)

விரைவில்...
கச்சேரி நல்லூர் வீதியில்
A/L
வணிகக்கல்வி
ஆசிரியர்
முரளி
(1636)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.